பக்கங்கள் 22+7

மாலை முரசு
கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆடி 07 செவ்வாய்க்கிழமை 23.07.2024 அதிர்வு 358

## பாரிய வெட்டுக்காயங்களுடன் ஓட்டோவுக்குள் ஆணின் சடலம்

### கொழும்பில் அதிகாலை பரபரப்பு

கொழும்பு, வார்ட் பிளேஸில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோவுக்குள் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு உயிரிழந்த ஆண் ஒருவரின் சடலத்தைப் பொலிஸார் மீட்டனர்.

02 ▶




# கறுப்பு ஜூலை தினத்தில் யாழில் கதறிய உறவுகள்!

### அரசே நிதி வேண்டாம் நீதியை வழங்கு எனக் கோரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கறுப்பு ஜூலை தினமான இன்று கவனயீர்ப்புப் போராட்டத்தை யாழ்ப்பாணத்தில் முன்னெடுத்தனர்.

வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் யாழ். மாவட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். பிரதான வீதியிலுள்ள கலைத்தூது மண்டபத்துக்கு முன்பாக இன்று மதியம் இந்தப் போராட்டத்தை அவர்கள் முன்னெடுத்தனர்.

02 ▶

# பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடு, காணி உரிமைகள் வழங்குவேன்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வாக்குறுதி

“எமது நாட்டில் 200 வருடங்களுக்கும் மேலான வரலாற்றைக் கொண்ட பெருந்தோட்ட சமூகம் எமது நாட்டினது மக்கள் தொகுதியாகும். தோட்ட மக்களுக்கு குடியுரிமை வழங்கும் பணிகளில் ரணசிங்க பிரேமதாஸ பெரும் பங்காற்றினார். குடியுரிமை குறித்து பேசும்போது, காணி உரிமை இல்லாத குடியுரிமை பயனற்றது. எமது நாட்டின் பிரஜைகள் தமது சொந்தக் காணியிலும், வீட்டிலும் வாழும் உரிமை அவர்களுக்கு இருக்கின்றது. இது அவர்களது அடிப்படை உரிமை.”

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 351 ஆவது கட்டமாக ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் மற்றும் அகராதிகள் என்பன கண்டி, கஹவடகோரலை, விவேகானந்தா கல்லூரிக்கு வழங்கி வைக்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

02 ▶





# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்



**கறுப்பு ஜூலை தினத்தில்...**

காணாமல் ஆக்கப்பட்டோரை மீட்டுத் தரக் கோரி வடக்கு, கிழக்கில் உள்ள ஒவ்வொரு மாவட்டங்களிலும் சுழற்சி முறையில் மேற்படி சங்கத்தினர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இதற்கமைய இன்று யாழ்ப்பாணத்தில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, “உறவுகள் எங்கே, நீதி வேண்டும், சர்வதேசமே கண்ணைத் திறந்து பார், உறவுகள் நீதி கோருகின்றபோது அரசே நிதியை வழங்கி ஏமாற்றாதே, எங்கள் உறவுகளுக்குப் பதில் கூறு” உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை அவர்கள் தாங்கியவாறு கோஷங்களை எழுப்பிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும், கறுப்பு ஜூலை தினமான இன்று கறுப்பு ஜூலைக் கலவரத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கும் நீதி வழங்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை, வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் யாழ். மாவட்ட சங்கத்துக்கான புதிய நிர்வாகத் தெரிவும் இன்று நடைபெற்றது. இதற்கமைய முன்னர் இருந்த சங்கத் தலைவி பூங்கோதை தலைமையிலான நிர்வாகமே மீண்டும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

---

**பாரிய வெட்டு...**

இன்று அதிகாலை ஒரு மணியளவில் பொலிஸ் அவசர இலக்கமான 119 இற்குக் கிடைத்த தகவலின்படி, குருந்துவத்தை பொலிஸாரால் வார்ட் பிளேஸ் தேசிய பல் வைத்தியசாலைக்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்த ஓட்டோவில் இருந்து சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

பின்னர் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினர் நடத்திய சோதனையில் மித்தெனிய பிரதேசத்தில் வசிப்பவருக்கு குறித்த ஓட்டோ சொந்தமானது எனவும், படுகொலை செய்யப்பட்டவர் கொடகவெல பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதான சமிந்த குமார எனவும் தெரிய வந்தது.

விசாரணையில் மேற்படி ஓட்டோ உரிமையாளர் ஓட்டோவைத் தனது மைத்துனருக்கு வாடகைக்குச் செலுத்தக் கொடுத்தார் என்று தெரியவந்தது.

சடலமாக மீட்கப்பட்டவர் பகலில் அலுமினியம் தொடர்பான வேலையில் ஈடுபட்டு இரவில் வாடகை ஓட்டோ ஓட்டுநராக இருந்தார் எனவும், அத்துருகிரிய பிரதேசத்தில் வாடகை வீட்டில் அவர் தங்கியிருந்தார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டதில் கொலை செய்யப்பட்ட நபரின் மார்பிலும் கழுத்திலும் பலத்த காயங்கள் காணப்படுகின்றன எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

ஓட்டோவின் பக்கவாட்டு கண்ணாடி ஒன்றும் உடைந்து கிடந்ததும், பின் இருக்கைக்கு அருகில் அவரது சடலம் கிடந்ததாலும் பொலிஸாருக்குச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

எனினும், கொலை செய்யப்பட்ட நபர் மற்றும் கொலைக்கான காரணம் இதுவரையில் தெரியவரவில்லை. இந்நிலையில், அப்பகுதியிலுள்ள சி.சி.ரி.வி. கமராக்களைப் பொலிஸார் சோதனை செய்து வருகின்றனர்.

---

**பெருந்தோட்ட...**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அரசமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தில் அரசியல் மற்றும் சிவில் உரிமைகள் மட்டுமே உள்ளடங்கியுள்ளன. எமது நாட்டிலும் தென்னாப்பிரிக்காவின் அரசமைப்பைப் போல் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கு மேலதிகமாக, பொருளாதாரம், சமூகம், கலாசாரம், வாழ்வாதாரம், சுகாதாரம், கல்வி மற்றும் சொந்த வீட்டுக்கான உரிமைகளையும் உள்ளடக்க வேண்டும்.

எமது நாட்டின் பெருந்தோட்டத்துறையில் அப்பாவியாக வாழ்ந்து வரும் பெருந்தோட்ட மக்களின் வாழ்வோடு விளையாடும் அரசியல் விளையாட்டுகளுக்கு இடம்கொடுக்காமல், விவசாயம் செய்யப்படாத தனியார் மற்றும் அரசுக்குச் சொந்தமான தரிசு நிலங்களை இவர்களுக்கு வழங்கி, சொந்தமாக வீடு கட்டி, அந்த காணியில் சிறிய தேயிலை தோட்டம் அமைத்து, மக்கள் சமூகத்தில் கௌரவமான வாழ்க்கையை வாழ்வதற்கான உரிமையையும், வரத்தினையும் ஐக்கிய மக்கள் சக்தி அரசில் பெற்றுத்தருவேன்.





மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான விடயங்கள் குறித்தான அம்சங்கள் அடிப்படை உரிமைகள் அத்தியாத்தில் சேர்க்கப்படும்போது, ஒவ்வொரு ஆட்சியாளரும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய அழுத்தத்தைச் சந்திப்பார். இது ஆட்சியாளர்களது பொறுப்பாகிவிடும்.

அடிப்படை உரிமைகள் குறித்து பேசினாலும், கொரோனா வைரஸின் போது முஸ்லிம் மக்களினது மத மற்றும் கலாச்சார உரிமைகள் மீறப்பட்டன. தகனமா? அடக்கமா? என்ற விவகாரத்தில் தவறான அறிவியல் அறிக்கைகளைக் காட்டி முஸ்லிம் சமூகத்தினர் பாராபட்சமாக தாக்கப்பட்டனர். மத, கலாசார உரிமைகளை அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தில் சேர்க்கப்பட்டிருந்தால் ஆட்சியாளர்களால் அவ்வாறான நடவடிக்கைகளை செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருக்கும்.” – என்றார்.

# அன்று ஹிட்லர் செய்ததும் தவறுதான்; இன்று இஸ்ரேல் செய்வதும் தவறுதான்

## பாலஸ்தீன மக்களின் உரிமைகளுக்காக என்றும் முன்னிற்பேன் எனச் சஜித் உறுதி





“பாலஸ்தீன மக்கள் பெரும் அரச பயங்கரவாதத்துக்கு ஆளாகியுள்ளனர். எனது தந்தை பாலஸ்தீன மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்தது போல், நானும் அம்மக்களின் உரிமைகளுக்காக முன்னிற்பேன். இஸ்ரேல் நாட்டின் தற்போதைய பிரதமருடைய ஆட்சி பாலஸ்தீன மக்களை அழித்தொழிக்கும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.”

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 354 ஆவது கட்டமாக ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் மற்றும் அகராதிகள் என்பன கண்டி, செங்கடகல, பாததும்பர, கடுகஸ்தோட்டை ஸாஹிரா ஆண்கள் கல்லூரிக்கு வழங்கி வைக்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது, பாடசாலை அபிவிருத்தி நிதியத்துக்கு ஒரு இலட்சம் ரூபா நிதியுதவியும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஹிட்லர் யூதர்களை வதை முகாம்களில் அடைத்து விஷவாயுகளை விசிறி படுகொலைகளை முன்னெடுத்தார். அன்று ஹிட்லர் செய்தது தவறு போலவே இன்று இஸ்ரேல் செய்து வருவதும் தவறாகும். இந்தத் தவறை தவறாகப் பார்க்க வேண்டும். இங்கு ஒரு நாடாக நாம் முதுகெலும்பை நிமிர்த்திக் கொண்டு தனித் தீர்மனாத்தை எடுத்து செயற்பட வேண்டும்.

பாலஸ்தீன மக்களும் இஸ்ரேல் அரசும் அடுத்தடுத்து இரு நாடுகளாக ஒருவருக்கொருவர் நல்லிணக்கத்துடனும் நட்புடனும் வாழ வேண்டும் என்பதே ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாடாகும். இதற்கு ஆதரவாக முன்னிற்பேன்.

யார் தவறு செய்தாலும் அதைத் தவறாகப் பார்க்கும் மனப்பாங்கு இருக்க வேண்டும். பாலஸ்தீன மக்களுக்காக நான் முன்னிற்பேன். பாலஸ்தீன மக்களின் உரிமைகளுக்காக ஐ.நா. பொதுச்சபை பல தீர்மானங்களை

தொடர்ச்சி▼









# அன்று ஹிட்லர் செய்ததும் தவறுதான்; இன்று இஸ்ரேல் செய்வதும் தவறுதான்





தொடர்ச்சி▲

நிறைவேற்றியுள்ளது. நிறைவேற்றப்பட்ட ஒஸ்லோ மற்றும் ஜெனிவா ஒப்பந்தங்கள் பல காணப்படுகின்றன. உலகத்தில் என்று இருந்தாலும் சரி, நமது நாட்டில் என்று இருந்தாலும் சரி, தீவிரவாதத்துக்கு இடமளிக்கக்கூடாது. நடுத்தர பாதையிலும் சரியான பாதையிலே நாம் பயணிக்க வேண்டும். பாலஸ்தீன மக்களின் மக்கள் சார் உரிமைக்காகவும், அவர்களனது தாயகத்தின் மீதான உரிமைகளுக்காகவும் நாடாக நாம் முன்னிற்போம்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் என அனைத்துப் பிரஜைகளும் மதவாதம், மத பேதம், இனவாதம், இன பேதங்களை நிராகரித்து ஒரு தாயின் பிள்ளைகளாக நாட்டைக் கட்டியெழுப்பும் பயணத்தை ஆரம்பிக்க வேண்டும்.

நமது நாட்டின் கல்வி முறையில் பல குறைபாடுகள் காணப்டுகின்றன. கல்வியை கட்டியெழுப்ப அரச நிதி அதிகரிக்கப்படுவதாக கூறப்பட்டாலும், அரச நிதியை மட்டும் கொண்டு பாடசாலைகளைக் கட்டியெழுப்ப முடியாது.

எதிர்க்கட்சியாக, ஐக்கிய மக்கள் சக்தி பிரபஞ்சம் மற்றும் மூச்சுத் திட்டங்களுக்கு மட்டும் இதுவரை ஒரு பில்லியன் ரூபாவுக்கும் மேல் செலவிட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி கல்வி, சுகாதாரம் மற்றும் பிற துறைகளைக் கட்டியெழுப்ப விசேட திட்டத்தை வகுத்துள்ளது. இதன் மூலம் இலவசக் கல்வியை உயர்மட்டத்துக்குக் கொண்டு செல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்படும்." – என்றார்.






Muhurtham
Jewels
PRESENTS
PRADEEP
kumar
BUY TICKETS ON
eventbrite
SCAN NOW
JULY
27
2024
LIVE IN
TORONTO
CANADA EVENT CENTER
EVENT BY
tamil one
SV MEDIA
RADIO PARTNER
PRINTING PARTNER
E PAPER PARTNER
DESIGN BY
தளம் FM
88.9 HD3 & 105.9
INK DRIP
முரசு
DESIGN
WOLF.CA

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# எயிட்ஸ் பாதிப்பு அபாயம்

இலங்கையில் இளைஞர்களிடையே எச்.ஐ.வி அல்லது எயிட்ஸ் நோயாளிகள் எண்ணிக்கை அதிகரித்து வருவதை தேசிய பாலியல் ரீதியாக பரவும் நோய்கள் மற்றும் எயிட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டம் அவதானித்து எச்சரிக்கை அறிவிப்பு விடுத்திருக்கின்றது.

எச்.ஐ.வி. - எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட பெரியவர்களின் எண்ணிக்கை 3,169 என்றும் 15 முதல் 24 வயதுக்குட்பட்டவர்களிடையே எய்ட்ஸ் பரவுவது அதிகரித்துள்ளது எனவும் தேசிய பாலியல் நோய் விசேட வைத்திய நிபுணர் வினோ தர்மகுலசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு 40 குழந்தைகள் எச்ஐவி - எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்ற அதிர்ச்சித் தகவலையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

எச்.ஐ.வி-யால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2022 இல் 607 ஆக இருந்து. 2023 இல் 694 ஆக உயர்ந்துள்ளது, இது 14 சதவீத உயர்வைக் குறிக்கிறது. புதிதாக அடையாளம் காணப்பட்ட இந்த 694 நோயாளிகளில் 613 பேர் ஆண்கள்.

மற்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் எச்.ஐ.வி - எயிட்ஸ் தாக்கமும் பரவல் விகிதமும் குறைவாகத்தான் உள்ளன. ஆனாலும், ஆபத்திற்குட்படக் கூடிய வாய்ப்பும் அதிகம் உள்ளது.

பாலியற் தொழிலும் ஓரினச் சேர்க்கையும் இலங்கையில் எச்.ஐ.வி. - எயிட்ஸ் பரவுவதற்கான முக்கிய காரணிகளாக உள்ளன என அடையாளம் காணப்பட்டுள்ளன.

இலங்கையில் எச்.ஐ.வியினால் பாதிக்கப்படும் இளைஞர், யுவதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் தேசிய பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் ஒழிப்பு திட்டம் தெரிவித்துள்ளது.

இலங்கை முழுவதிலும் உள்ள 42க்கும் அதிக எச்.ஐ.வி மருத்துவ முகாம்களில், இரண்டாயிரத்துக்கும் அதிக தொற்றாளர்கள் சிகிச்சைகளை பெற்று வருகின்றனர்.

ஆயினும், சிகிச்சைகளுக்கு வருகைத் தராதவர்கள், எச்.ஐ.வி தொற்றுக்குள்ளாகியமையை அறிந்துக்கொள்ளாதவர்களும் இந்த சமூகத்தில் வாழ்ந்து வருகின்றனர் என மருத்துவர்கள் கூறுகின்றனர்.

சமூகத்திலுள்ள இவ்வாறான தொற்றாளர்களுடன் பாலியல் தொடர்புகளை பேணுவார்களாயின், அவர்களுக்கும் எச்.ஐ.வி வைரஸ் தொற்று பரவுவதற்கான சாத்தியம் உள்ளதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

கொழும்பு, கம்பஹா மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களிலேயே இந்த வைரஸ் தொற்று அதிகளவில் காணப்படுவதாகவும் தேசிய பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் ஒழிப்பு திட்டத்தின் பணிப்பாளர் கூறுகின்றார்.

எச்.ஐ.வி தொற்றாளர்களுக்கு பல சமயங்களில் அது தொடர்பில் எந்தவித அறிகுறிகளும் தென்படாது. அதுவே பாரிய பிரச்சினை என்று மருத்துவர்கள் சுட்டுகின்றனர்.

எச்.வி.ஐ. தொற்றுக்கு அறிகுறிகள் தென்படாத நிலையில், அது முழு எயிட்ஸ் நிலைக்கு சென்றதை அடுத்தே அதற்கான அறிகுறிகள் வெளிப்படும். எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளாகி, அதற்கான அறிகுறிகள் தென்படுவதற்கு சுமார் 10 வருட காலம் கூட எடுக்கும் எனச் சுட்டப்படுகின்றது. இந்தக் காலகட்டத்தில் அந்நபர் பலருக்கும் இத்தொற்றை வழங்கி விட்டிருப்பார் என்றும் விளக்கப்படுகின்றது.

இலங்கையில் 20 முதல் 30 வயதுக்குட்பட்டவர்கள் - பாலுறவில் ஈடுபடுபவர்கள் -அதிக ஆபத்தில் உள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

நோய்த்தடுப்பு யுக்திகள் நன்கறியப்பட்டுள்ள போதிலும் - கணிசமான அளவு இளைஞர்கள் எச்.ஐ.வி, எய்ட்ஸ் பற்றிய அறிவைப் பெற்றிருந்த போதிலும் - தாங்கள் எச்.ஐ.வி தொற்றுதலுக்காளாகும் அபாயத்தைக் குறைவாக மதிப்பிட்டு, பேராபத்து விளைவிக்கும் நடவடிக்கைளில் இறங்குகின்றனர் என எச்.ஐ.வி, எய்ட்ஸ் ஒழிப்பு அமைப்பு கூறுகின்றது.

பாலியல் தொழிலாலும் ஓரினச் சேர்க்கையாலும் இலங்கையில் எய்ட்ஸ் நோய் பரவுகின்றன. பாலியல் தொழிலை கட்டுப்படுத்த வேண்டிய எமது அரசு கெசினோக்களை அறிமுகப்படுத்தி விபச்சார கேளிக்கைகளை அதிகரிப்பதனால் எய்ட்ஸ் நோய் பரவல் வேகம் அதிகரிக்கப்படுகின்றது. இது கவலைக்குரிய விடயமாகும்.

இலங்கையில் விபச்சார விடுதிகள் எய்ட்ஸ் நோயாளிகளை உருவாக்கும் நிலையங்களாகவுள்ளன. எனவே விபச்சார விடுதிகளை முற்றாக ஒழித்துக் கட்டுவதிலேயேதான் எய்ட்ஸை முற்றாக ஒழித்துக் கட்டுவது தங்கியுள்ளது.

கடந்த காலங்களை விட தற்போது 15, 16, 17 வயது மாணவர்கள் அதிகளவில் விபசாரத்தில் ஈடுபடுகின்றனர் எனவும் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. இதனால் எதிர்காலங்களில் மாணவர்கள் மத்தியில் அதிகளவு எய்ட்ஸ் நோயாளிகள் உருவாகும் அபாயம் தோன்றியுள்ளது எனவும் அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பெற்றோர்களும் சமூகநலன் காவலர்களும் இது விடயத்தில் கூடிய கவனம் எடுப்பது அவசியம்.

# கட்டாய தகனத்துக்கு முஸ்லிம்களிடம் மன்னிப்புக் கோருவதற்கு அரசு முடிவு

கொரோனாத் தொற்றுநோய்களின்போது இலங்கையில் அமுல்படுத்தப்பட்ட கட்டாய தகனம் கொள்கை தொடர்பாக அரசின் மன்னிப்புக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஆகியோரால் முன்வைக்கப்பட்ட கூட்டு அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கொரோனாவின் மருத்துவ மேலாண்மை குறித்து சுகாதார அமைச்சு வெளியிட்ட சுகாதார வழிகாட்டுதல்களின்படி, வைரஸால் இறந்தவர்களின் உடல்களை அப்புறப்படுத்தும் முறையாகத் தகனம் செய்யப் பரிந்துரைக்கப்பட்டது.

அதன்படி, கொரோனாத் தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் பலர் தகனம் செய்யப்பட்டனர்.

அதன்பின்னர் 2021ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் கடுமையான கட்டுப்பாடுகளுடன் அத்தகைய நபர்களின் உடல்களை அடக்கம் செய்ய அனுமதிக்கப்பட்டது.

இந்தநிலையில், கொரோனாத் தொற்றுக் காரணமாக உயிரிழந்த இஸ்லாமியர்களின் உடல்கள் தகனம் செய்யப்பட்டமைக்கு மன்னிப்புக் கோரும் நோக்கில் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# பலத்த காயங்களுடன் ஆணின் சடலம் மீட்பு!

## விபத்தில் உயிரிழந்தார் என்கிறது பொலிஸ்



கண்டி – யாழ்ப்பாணம் ஏ – 9 வீதியில் பலத்த காயங்களுடன் ஆணொருவர் இன்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டவர் மெல்சிரிபுர பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் பணியாற்றி வரும் நிலையில், தனது பணியை முடித்து விட்டு மீண்டும் வீடு நோக்கிச் சென்றுக் கொண்டிருக்கும் போது விபத்துக்குள்ளாகி உயிரிழந்துள்ளார் என்று திறப்பனை பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம், மிஹிந்தலை பகுதியில் வசிக்கும் 38 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நீண்டகாலத் திருட்டுச் சந்தேக நபர்கள் விளக்க மறியலில் வைத்து விசாரணை

**(பாறுக் ஷிஹான்)**

திருட்டுச் சம்பங்களில் நீண்ட காலமாக ஈடுபட்ட இரு சந்தேக நபர்களை 5 நாள் தடுப்பு காவலில் வைத்து விசாரணை மேற்கொள்ளுமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மருதமுனை புற நகர் பகுதிகளில் உள்ள 4 வீடுகள் ஒரே நாளில் உடைக்கப்பட்டு பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுள்ளதாக கடந்த சனிக்கிழமை (20) அன்று பாதிக்கப்பட்டவர்களால் முறைப்பாடுகள் வழங்கப்பட்டிருந்தன.

இந்த முறைப்பாட்டுக்கு அமைய பெரிய நீலாவணை பொலிஸார் உடனடியாக விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர். திருட்டு இடம்பெற்ற பகுதிகளில் உள்ள சிசிடிவி கமராக்களின் செயற்பாட்டையும் கண்காணித்திருந்தனர்.

இதற்கமைய திருடப்பட்ட வீடுகளில் அதிகாலை ஒரு மணி முதல் 3 மணி வரை திருடர்கள் கைவரிசைகளை காட்டி இருந்ததை அவதானித்தனர்.

தொடர் விசாரணைகளை துரிதப்படுத்தி இருந்த பெரிய நீலாவணை பொலிஸாருக்கு, போதைப்பொருள் பாவனை தொடர்பாகத் தகவல் ஒன்று இரவு கிடைக்கப் பெற்றது.

இதன் போது துரிதகதியில் செயற்பட்ட பொலிஸ் குழு, திருடர்கள் பதுங்கி இருந்த வீட்டை முற்றுகையிட்டு அங்கிருந்த 2 சந்தேக நபர்களைக் கைது செய்தனர்.

இதன் போது கடந்த காலங்களில் வீடுகள் உடைத்து திருடப்பட்ட பெருந்தொகையான நகைகள் மற்றும் பணம் சில போதைப் பொருள்கள் என்பன சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அங்கிருந்து மீட்கப்பட்டன.

இரு சந்தேக நபர்களிடம் மேலதிக விசாரணைகளை பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜே.எஸ்.கே.வீரசிங்க தலைமையிலான பொலிஸார் மேற்கொண்டனர்.

அவர்களைக் கல்முனை நீதிமன்ற பதில் நீதிவான் அப்துல் ரஷீட் முஹம்மது கலீல் முன்னிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (21) ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது இரு சந்தேக நபர்களை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை தடுப்புக் காவலில் வைத்து விசாரணை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ளார்.

இரண்டு சந்தேக நபர்களிடம் இருந்து, திருடப்பட்ட தங்க நகைகளைக் குறைந்த விலைக்கு வாங்கி உருக்கிய கல்முனை நகைக்கடை உரிமையாளர்கள் நால்வரும் கைது செய்யப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டதுடன் அவர்களை சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.










# கிளிநொச்சியில் கறுப்பு ஜூலை நினைவேந்தல்

**(எஸ். நிதர்ஷன்)**

கறுப்பு ஜூலைப் படுகொலையின் 41 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் கட்சியின் மாவட்டப் பணிமனையான அறிவகத்தில் நடைபெற்றது.

கரைச்சிப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் தலைமையில் நடைபெற்ற இந்த நினைவேந்தல் நிகழ்வில், தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் கல்வி அமைச்சர் தம்பிராஜா குருகுலராஜா, எழுத்தாளரும் ஆசிரியருமான தீபச்செல்வன் ஆகியோர் நினைவுரைகளை ஆற்றினர்.

கட்சியின் செயல்நிலை உறுப்பினர்கள் பலரது பங்கேற்புடன் நடைபெற்ற இந்த நினைவேந்தலின்போது, அண்மையில் மறைந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தனுக்கும், தமிழீழ இராணுவ இயக்கத்தின் தலைவரும் ஈழப்போராட்டத்தின் முன்னோடிகளுள் ஒருவருமான தம்பாப்பிள்ளை மகேஸ்வரனுக்கும் (பனாகொட மகேஸ்வரன்) அஞ்சலி செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.








# 450 மில்லியன் ரூபா செலவில் விஸ்தரிக்கப்பட்ட ஏறாவூர் ஆதார வைத்தியசாலை திறந்து வைப்பு





(எம்.எம்.ஜெஸ்மின்)

சீன நாட்டு அரசின் நிதியுதவியுடன் ஏறாவூர் ஆதார வைத்தியசாலைக்கென பல்வேறு வசதிகளுடன் அமைக்கப்பட்டுவரும் கட்டடத் தொகுதியின் முதற்கட்டம் முடிவுற்ற பகுதியைக் கிழக்கு மாகாண ஆளுனர் செந்தில் தொண்டமான் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் அலி ஸாஹிர் மௌலானாவின் வேண்டுகோளின் பேரில் இந்தக் கட்டடத்தை நிருமாணிப்பதற்கென கடந்த நல்லாட்சி காலத்தில் 450 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

நவீன வசதிகள் கொண்ட சத்திர சிகிச்சைக் கூடம், இரத்த வங்கி, அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் மருத்துவ விடுதி போன்ற வசதிகள் இக்கட்டடத்தில் உள்ளடக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏறாவூர் ஆதார வைத்தியசாலையின் அத்தியட்சகர் வருண சம்பத் பண்டார தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் அலி ஸாஹிர் மௌலானா, மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் என். சிவலிங்கம், மாகாண பணிப்பாளர் டாக்டர் டிஜிளம். கொஸ்தா, பிராந்தியப் பணிப்பாளர் டாக்டர் ஆர். முரலீஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# திறன் பலகையின் மேம்படுத்தப்பட்ட பயன்பாடுகள் தொடர்பிலான பயிற்சி

யாழ். மாவட்டத்தின் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில், ஆசிரியர்களுக்கான திறன் பலகையின் மேம்படுத்தப்பட்ட பயன்பாடு தொடர்பான பயிற்சியானது கடந்த 20 மற்றும் 21 ஆம் திகதிகளில் நடைபெற்றது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, இரட்ணம் பவுண்டேஷன் நிறுவனம், உலக மருத்துவ சுகாதார நிறுவனம் உதவியுடன், விசன்ஸ் குளோபல் எம்பவர்மன்ற் நிறுவனம் நடத்திய இந்தப் பயிற்சியில், சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் அதிபர், பிரதி அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் உட்பட 35 பேர் திறன்பலகையை கற்றல்-கற்பித்தல் செயல்பாடுகளுக்கு வினைத்திறன் மற்றும் விளைதிறனான முறையில் பயன்படுத்துவது தொடர்பில் பயிற்றுவிக்கப்பட்டனர்.

இரட்ணம் பவுண்டேஷன் நிறுவனத்தின் திறன் பலகை வழங்கல் திட்டத்தின் ஒரு பகுதியாக, ஆசிரியர்கள் தமது பாடசாலைகளில் உள்ள திறன் பலகையை அதி உச்சமாகப் பயன்படுத்தி, நவீனத்துவமான கற்பித்தலை மாணவர்களுக்குச் செயல்படுத்துவதற்கு உதவும் நோக்குடன் 10 பாடசாலைகளில் முன்மொழியப்பட்ட திறன் பலகையின் மேம்படுத்தப்பட்ட பயன்பாடு தொடர்பான முதல் பயிற்சியானது, சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

கற்றல்-கற்பித்தல் செயல்பாடுகளில் திறன் பலகையை பயன்படுத்தல், தேடுபொறி பயன்பாடு, ஆவணங்கள் மற்றும் காணொளிகளைப் பதிவிறக்கம் செய்தல், எளிமையான தட்டச்சு பயன்பாடு, கற்றல் மாதிரிகளை உருவாக்கல், காணொளிகளை உருவாக்கல், வினாத்தாள்களை உருவாக்கல் மற்றும் செயற்கை நுண்ணறிவு கருவிகள் பயன்பாடு ஆகியவற்றில் செயல்பாட்டு வழிப் பயிற்சியாக இப்பயிற்சி நடைபெற்றது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபரின் ஒழுங்கமைப்பில், பங்கேற்ற அனைவருக்கும் தனித்தனி கணினியை இணைய வசதிகளுடன் பயன்படுத்தும் வசதிகள் முன்ஆயத்தத்தோடு செய்யப்பட்டன.

பயிற்சி வழங்கப்பட்டது மிகச் சிறந்த முன்மாதிரி. பயிற்சி பெற்ற 35 ஆசிரியர்களுக்கும், தொடர் பயிற்சிகள் வழங்கி, அவர்களைப் பயிற்றுனர்களாக உருமாற்றி சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் ஏனைய ஆசிரியர்களையும் பயிற்றுவிக்கும் செயற்றிட்டம் அதிபர் தலைமையில் முன்மொழியப்பட்டது.

இந்தப் பயிற்சியானது, மிகுந்த பயனுடையதாக இருந்ததாகவும், மேலும் தமக்கு இவ்வாறான பயிற்சிகள் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும் எனவும் பயிலுனர்களால் வழங்கப்பட்ட பின்னூட்டலில் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த பயிற்சியில், உலக மருத்துவ சுகாதார நிறுவனத்தின் பணிப்பாளர் ராதாகிருஷ்ணன், விசன்ஸ் நிறுவனத்தின் தலைவர் திரு-.ந.தெய்வேந்திரராஜா மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி அ.மயூரன் ஆகியோர் கலந்து கொண்டனர். கிருசாந்தன், சிவசெல்வன் மற்றும் செந்தூரன் ஆகியோர் வளவாளர்களாகப் பயிற்சியை முன்னெடுத்திருந்தனர்.

# நாட்டில் அதிகரிக்கும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள்...!



பெண்களுக்கு எதிரான வன்முறை என்பது பெண்களுக்கு எதிராக முதன்மையாக அல்லது தனிப்பட்ட முறையில் நிகழ்த்தப்படும் வன்முறை செயல்களை மொத்தமாகக் குறிப்பிடுகிறது. சில நேரங்களில் வெறுப்பு குற்றமாகக் கருதப்படும் பாதிக்கப்படுபவரின் பாலினத்தை முதன்மை காரணமாகக் கொண்டு இத்தகைய வன்முறை குறிப்பிட்ட குழுவினரைக் குறி வைக்கிறது.

ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 25 ஆம் திகதி பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. இதற்கான தீர்மானம் ஐக்கிய நாடுகள் சபை பொதுச் சபையால் 1999 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்த தீர்மானம் 54 – 134 என்று அழைக்கப்படுகிறது.

பெண்களுக்கு எதிரான வன் கொடுமைகள் குறித்து பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் முகமாக இந்தத் தினம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. என்னதான் தினம் அனுஷ்டிக்கப்பட்டாலும் பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும் நம் நாட்டில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் குறைந்ததாக வில்லை.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் எனப்படும் பொழுது அது உடல் மற்றும் பாலியல் ரீதியான வன்முறைகள் மாத்திரமல்ல, பாலின அடிப்படையிலான வன்முறைகளை விளைவிக்கக் கூடிய எந்த ஒரு செயலையும் அது குறித்து இருக்கின்றது. பெண்களின் முன்னேற்றம் இன்று பல துறைகளில் வளர்ந்து வருகிறது என்பதை ஆனந்துடன் ஒத்துக் கொள்ளும் நாம் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தீரவில்லை என்பதை அவமானத்துடன் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

கடந்த சில ஆண்டுகளாக பெண்களுக்கு எதிரான குற்றச் செயல்கள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. மனைவியாக இருந்தாலும் அவரது அனுமதியின்றி உறவு கொள்ள முயல்வது குற்றம் என்னும் அளவு ஆயசவையட சுயிந பற்றி விவாதம் வந்து கொண்டிருக்கும் ஒரு நாகரிகம் அடைந்த சமூகத்தில் தினம்தோறும் தொடர்ந்து நடக்கும் பாலியல் வன்முறைகள் பெரும் கவலையையும், பதற்றத்தையும் உண்டாக்கிக் கொண்டிருக்கிறது.

சமீப காலமாக பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்முறைகள் அதிகரிப்பதற்கான காரணம் என்ன? பாடசாலை, பணியிடங்கள், பயணங்கள், வீடுகள், வீதிகள் என அனைத்து இடங்களிலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நடந்து வருகின்றன. சிறு பெண் குழந்தைகளுக்கு இழைக்கப்படும் அநீதிகள் அன்றாட செய்தியாகி விட்டது.

இலங்கையைப் பொறுத்தவரை வன்முறைகள் எனும் போது பாரியளவில் பெண்களுக்கே நிகழ்வதாக 2018 இன் ஐ.நா. ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாலியல் வன்முறை என்பது நடக்கக்கூடாது ஒன்று. ஆனால் தொடர்ந்து நடந்து கொண்டே வருகிறது. இதற்கு இன்னமும் கடுமையான சட்டம் கொண்டுவர வேண்டும். பல விஷயங்களுக்காக நாம் போராடி இருக்கின்றோம். எனவே இந்தக் குழந்தைகளுக்காகவும் நாம் போராட வேண்டும். எமது அன்றாட வாழ்க்கையில் நாட்டில் நடந்து கொண்டிருக்கும் வன்முறைகளை கவனித்து வருகின்றோம் நாம் தினந்தோறும் பார்வையிடுகின்ற பத்திரிகைகள், சமூக ஊடகங்கள் , பாலியல் வன்முறை தொடர்பான செய்திகள் வெளியாகி கொண்டே இருக்கிறது.

பாலியல் வன்முறைகள் அதனை தொடர்ந்து சில வேளைகளில் நடத்தப்படும் படுகொலைகள் தொடர்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டாலும் சிலர் தண்டிக்கப்படுவதுடன் பலர் விடுதலை ஆகின்றனர்.

சரியான சாட்சியங்கள் இல்லாமையும், பாதிக்கப்பட்டவர் தனக்கு ஏற்பட்ட வன்முறையை வெளிப்படையாக தெரிவிக்க மறுப்பதும் மறைப்பதுமே தற்போதும் இந்த வன்முறைகள் நடப்பதற்கு உரிய காரணமாகக் கொள்ளலாம்.

அண்மைக் காலத்தில் வீட்டில் உறவினர்களாலேயே சிறு பெண் பிள்ளைகளுக்கு எதிரான வன்முறைகள் நடக்கின்றன. முகநூலில் சிறு பெண்களை தாக்கிய காணொளிகள் அண்மையில் வெளியாகியிருந்ததை அனைவரும் பார்த்திருப்போம்.

இவ்வாறாக நாம் காணொளிகளை பார்த்து விட்டு கடந்து செல்வோமாக இருந்தால் நம் பெண் பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக் குறியாகிவிடும். வித்யாவின் கொலை வழக்குக்குப் பின்னர் எத்தனை போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் நடந்தும் இன்றும் இவ் வன்முறைகள் ஓயவில்லை. ஏன் இந்தப் பெண்கள் மீதான வன்முறையை மேற்கொள்கின்றனர்? ஏன் பாலியல் துஷ்பிரயோகங்கள் இடம்பெறுகின்றன? தீர்வு கூற முடியாத நிலையில் உள்ளோம்.

தனி நபர் ஒருவருக்கு எதிராகவோ சமுதாயம் ஒன்றுக்கு எதிராகவோ அதிகாரம் அல்லது உடல் வலிமையை வேண்டுமென்றே பயன்படுத்தி உடல் உள ரீதியான பாதிப்புகளை ஏற்படுத்துதல் அல்லது ஏற்படுத்த எத்தனித்தல் வன்முறை செயற்பாடுகளில் அடங்குகின்றன.

தொடர்ச்சி▼

# நாட்டில் அதிகரிக்கும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள்...!

**தொடர்ச்சி▲**

பலமுறையான வன்முறைகள் எமது நாட்டில் இடம்பெறுகின்ற போதும் குறிப்பாக பாலியல் வன்முறை பாரிய விளைவுகளை சமுதாயம் ஒன்றில் ஏற்படுத்துகிறது.

ஆண்கள் தற்போது போதைக்கு அடிமையாகி வருகின்றனர் இந்த நாளில் எத்தனை பேர் போதைக்கு அடிமையாகாமல் இருக்கிறார்கள் என்பது கேள்விக் குறியாக உள்ளது.

இப் போதையானது குற்றச்செயல்களை குற்ற உணர்வு இல்லாமல் செய்ய

தூண்டுகிறது. இது மட்டுமின்றி இணையம் முதற்கொண்டு எல்லா இடங்களிலும் பாலியல் தொடர்பான காணொளிகளும் படங்களும் எல்லோருக்கும் எளிதில் கிடைக்கும் வகையில் கொட்டி கிடக்கின்றன. இவ்வாறான விடயங்கள் வன்முறையில் ஈடுபட வைக்கின்றது.

எவ்வாறு இருந்தாலும் வன்முறைகளில் இருந்து எவ்வாறு பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என நம் பிள்ளைகளுக்கு சிறு வயது முதல் கற்றுக்கொடுக்க வேண்டியது பெற்றோரின் தலையாய கடமையாக உள்ளது.

குழந்தைகளுக்கு Good Touch, Bad Touch குறித்து கற்றுக் கொடுக்க வேண்டும்.

விழிப்புணர்வாக வாழ கற்றுக் கொடுக்க வேண்டும். வீடுகளிலேயே சிறு பெண் பிள்ளைகளுக்கு எதிராக நடைபெறுகின்ற வன்முறைகள் குறைக்கப்பட வேண்டும். குற்ற செயல்கள் வன்முறைகளுக்கு உரிய தண்டனைகள் வழங்கப்பட வேண்டும். வீட்டில் நடக்கும் பாலியல் சார்ந்த வன்முறைகளை சிறு பெண் பிள்ளைகள் தயக்கமின்றி தனது பாதுகாவலர்களுக்கு, தனது பெற்றோர்களுக்கு கூறுதல் வேண்டும்.

கடந்த ஐந்து மாதங்களில் மட்டும் வடக்கு , கிழக்கு பகுதிகளில் பெண்களுக்கு எதிரான

எத்தனை வன்முறைகள் நடைபெற்றுள்ளன என்பதை கணக்கில் எடுக்க வேண்டும். அவ்வாறு கணக்கில் எடுக்கும் போது நம் நாட்டில் எத்தனை வன்முறை சம்பவங்கள் வடக்குக் கிழக்கு பகுதியில் மாத்திரம் நடைபெற்றுள்ளன? என்பதை எம்மால் அறிந்து கொள்ள முடியும்.

வடக்கு – கிழக்கில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்கள் பல சமூக ஊடகங்களில் காணொளிகளாக வந்துள்ளன. வன்முறைகள் மேற்கொள்வர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்படும் இடத்திலேயே வன்முறைகளை சிறிதளவேனும் குறைக்க முடியும், அதுமட்டுமன்றி நம் நாட்டில் ஏற்படும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்து அனைவரும் கவனம் செலுத்த வேண்டும்.

குறிப்பாக பெண்களே தங்களை தாங்களே பாதுகாத்துக் கொள்ளும் நிலைக்கு வருதல் வேண்டும்.

**சி.கதீசனா,**
**ஊடகக் கற்கைகள், யாழ். பல்கலைக்கழகம்.**











# மனித – யானை மோதல் சம்பந்தமாக
# பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வு!

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

ஹெல்ப் ஸ்ரீ லங்கா அமைப்பால் மனித யானை மோதலை தவிர்த்து நாட்டில் பயமின்றி சுதந்திரமாக வாழ்வதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பானன விழிப்புணர்வுச் செயலமர்வு அநுராதபுரம், ஹொரவப்பொத்தான, மந்தாகனி மண்டபத்தில் இடம்பெற்றது.

பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் பங்கேற்ற மேற்படி செயலமர்வில் மனித – யானை மோதல் பற்றி தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது.

யானையின் வாழிடம் மனிதர்களால் தொடர்ச்சியாக அழிக்கப்பட்டு வருவதாலும், சேனைப் பயிர்ச் செய்கை, நவீன நகரமாக்கல், தொழிற்சாலைகள் அமைத்தல், இயற்கை நீர்நிலைகள் அழிக்கப்படுதல் காரணமாக காட்டில் சுதந்திரமாக நடமாடிய யானைகள் உணவு மற்றும் நீர் தேடி மக்கள் வாழும் குடியிருப்பு பகுதிகளுக்குள் நுழைந்து மனித உடமைகளை சேதப்படுத்துவதாலும், பெறுமதியான மனித உயிர்கள் காவு கொள்ளப்படுவதாலுமே பிரச்சினை ஆரம்பமாகியுள்ளது.

இந்தச் செயலமர்வு மிகவும் வெற்றிகரமாக அமைந்தது, இது போன்ற ஒரு திட்டத்தில் மத்திய சுற்றாடல் அதிகார சபையுடன் இணைந்து தொடர்ந்து பணியாற்றுவதற்கான கதவுகளைத் திறந்தமை பாராட்டத்தக்கது.

கிராமத்தில் உள்ள அடிமட்ட அமைப்புகளுடன் நேரடியாகப் பணியாற்றுவதை எதிர்காலத்தில் தொடர்ச்சியாக மேற்கொண்டு யானைகளின் மோதலைக் கட்டுப்படுத்த பல வழிகளை ஹெல்ப் ஸ்ரீலங்கா அமைப்பு மேற்கொள்ளவுள்ளது.

முக்கியமாக மனித உயிர்களை காப்பாற்றுவதற்காக யானை வேலிகளில் கவனம் செலுத்துகிறோம். இது விவசாயிகளை வேலி மற்றும் அதன் பராமரிப்பில் பயிற்சி பெற ஊக்குவிக்கும் என நம்புகிறோம் என்று இதன்போது தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யானை – மனித மோதல் முகாமைத்துவம் தொடர்பான பிரதான உரையைக் களனி பேராதனைப் பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் சுதேஷ் ருவிந்த நிகழ்த்தினார்.

யானைகளுடன் மனிதர்கள் எவ்வாறு பாதுகாப்பாக வாழ்கிறார்கள் என்பது இங்கு விளக்கப்பட்டுள்ளது.

சுற்றாடல் ஆணையாளர், சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர், அதிபர்கள் ஆகியோரும் உரையாற்றினர்.

நிகழ்வின் இறுதியில் சுற்றால் அதிகார சபையால் நடத்தப்பட்ட நிகழ்வில் பச்சைப் பதக்கம் பெற்ற மாணவர்களுக்குச் சின்னமும் சூட்டப்பட்டது.






# காத்தான்குடி பொலிஸ் பிரிவில் யுக்தியவில் 15 பேர் கைதாகினர்

## பெண்ணொருவர் ஐஸ் போதையுடன் கைது



(அஸ்ஹர் இப்றாஹிம்)

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட யுக்திய போதைப் பொருள் ஒழிப்புத் திட்ட சுற்றிவளைப்பின் போது 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரமேஸ் தெரிவித்துள்ளார்.

இன்று செவ்வாய்க்கிழமை (23) மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது பெண்ணொருவர் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

நாவற்குடா,நொச்சிமுனை மற்றும் கல்லடி பிரதேசங்களில் சுமார் 40 லீற்றர் கசிப்புடன் 8 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களும்கைப்பற்றப்பட்டபோதைப்பொருள்களும் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இது சம்மந்தமாக மேலதிக விசாரணைகளைக் காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# சாய்ந்தமருதில் பாடசாலை சேவைகளை வழங்கும் ஓட்டோக்களுக்கு இலட்சினை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது பிரதேச பாடசாலை சேவை வழங்கும் ஓட்டோ சாரதிகள் கூட்டுறவுச் சங்கம் தமது அங்கத்தவர்களுக்கு அதன் புதிய இலச்சினையை அறிமுகம் செய்தது. அதனை அங்கத்தவர்களின் ஓட்டோவில்ஒட்டும் நிகழ்வும் சாய்ந்தமருது பீச் பார்க் சதுக்கத்தில் நேற்று (22) நடைபெற்றது.

இந்த நிகழ்வில்சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எல்.சம்சுதீன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.





# 1983 கறுப்பு ஜூலையும் ஆவணப்பட விமர்சனமும்



கறுப்பு ஜூலை கறைபடிந்த நாளாக மட்டுமன்றி நீங்காத நினைவலைகளோடு பயணிக்கும் கரிநாளாகிறது. 1983 ஆம் ஆண்டு ஜூலை மாத நிகழ்வுகள் உலகெங்கிலும் உள்ள ஒட்டு மொத்த தமிழ் மக்களையும் வியப்பில் ஆழ்த்தியது.

ஜூலை 24 மற்றும் 29 இற்கு இடையில், கொழும்பு மற்றும் இலங்கையின் பல பகுதிகளில் தமிழர்கள் திட்டமிட்ட முறையில் வன்முறைகளால் குறிவைக்கப்பட்டனர். தமிழ் மக்களுக்கு எதிராக 1983 இல் ஜூலை 23 தொடங்கி சில வாரங்களாக நீடித்த இவ் வன்கொடுமை 3000 இற்கு உட்பட்ட தமிழ் மக்களின் உயிரை தன்வசப்படுத்திக் கொண்டது.

முதியவர்கள், பெண்கள், குழந்தைகள் என்ற வேறுபாடின்றி அனைவரும் தாக்கப்பட்டனர். தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் இனப்படுகொலையை அங்கீகரிப்பது முக்கியமானதாகும். இலங்கையில் இருந்து வரும் தமிழ் சமூகம் இந்த வாரம் கறுப்பு யூலையின் 41 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது.

1983 BLACK JULY என்ற ஆவணப்படம் சோமீதரனால் உருவாக்கப்பட்டதாகும். சோமீதரன் ஒரு ஓடியோ விசுவல் பத்திரிகையாளர் மற்றும் திரைப்பட தயாரிப்பாளரான அவர் கொழும்பில் வானொலி தொகுப்பாளராகத் தனது வாழ்க்கையைத் தொடங்கினார். இலங்கையில் பிரிட்டிஷ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்காக ஆவணப் படங்களைத் தயாரிப்பதில் தனது நிபுணத்துவத்தை பங்களித்துள்ளார். அதன் அடிப்படையில் 1983 Black july எனும் இந்த ஆவணப்படம் உணர்வு பூர்வமான கதைக் களத்தில் அமைந்துள்ளது.

இவ் ஆவணப்படத்தில் camera, Narrator, script மூன்றும் சோமிதரனால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆவணப்படத்தின் கதை சொல்லலைப் பற்றிப் பார்க்கும் போது ஆரம்பத்தில் கதை சொல்வதாக ஆரம்பிக்கப்பட்டு பின்னர் பின்னணி குரலோடு கதை நகர்கிறது. இதில் வருகின்ற பின்னணி இசையானது சோகமான உணர்வைக்கொண்டு வருவதோடு நேரில் அனுபவித்ததைப் போன்ற நிலைகை குத் தள்ளுகின்றது.



இந்த ஆவணப் படத்தில் பயன்படுத் தப்பட்டுள்ள நிறப் பாவனை பற்றிப் பார்க்கும்போது கருப்பு மற்றும் வெள்ளை நிறப் பாவனை பயன்படுத்தப்பட்டுள்ளது.

இது ஒரு மோசமான நினைவுகளை கட்டமைப்பது போன்ற கவலையான உணர்வுகளைத் தருகிறது.

இந்த ஆவணப் படத்தில் பயன்படுத் தப்பட்டுள்ள கமரா சொட் பற்றிப் பார்க்கும்போது medium shot, long shot, extreme long shot போன்ற சொட்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. பெரும்பாலும் கடைந கழழவயபந ளாழவ களே அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு slow motion shot உம் பயன்படுத் தப்பட்டுள்ளது.

கமரா அசைவுகள் பற்றி பார்க்கும் போது panning, law angle வகைகளே அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ் ஆவணப் படமானது ஆங்கில மொழி மூலத்தில் அமையப் பெற்றிருந்தாலும் சில நேர்காணல்கள் தமிழ் மொழியில் அமைந்துள்ளன.


தமிழ் மொழியில் நேர்காணல் வழங்கப்படும் போது அதற்கு உரிய ஆங்கில மொழி பெயர்ப்பு கீழே Text box இல் வழங்கப்பட்டிருப்பது சிறப்பாக உள்ளது.

இந்த ஆவணப்படமானது நேர்காணல் மூலமாகக் கதையை எடுத்து விளக்குவதோடு ஆவணப்படத்தில் ஐந்து நேர்காணல்கள் இடம் பெற்றுள்ளன. இந்த நேர்காணல்கள் ஆங்கிலம், தமிழ் மொழிகளில் இடம் பெற்றுள்ளன.

நேர்காணல் வழங்கியுள்ளோரின் பெயர்கள்,பதவிகள் அவர்களுடைய நேர்காணல்களின் கீழே தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது. நேர்காணல் மூலம் கதையைச் சொல்பவர்களின் தோற்றம், தெளிவு என்பன மேலும் இவ் ஆவணப்படத்தை சிறப்பூட்டுகிறது. 17 நிமிடம் 15 செக்கனில் அமைந்துள்ள இந்த ஆவணப்படம் இலகுவாகவும், மெதுவாகவும் கதையைக் கொண்டு நகர்த்துகின்றது.

இவ் ஆவணப்படம் மூலம் கறுப்பு யூலை பற்றி மிக அற்புதமாக சோமீதரன் எடுத்துக் காட்டியுள்ளார். எத்தனை காலங்கள் சென்றாலும் கறுப்பு யூலை என்பது மறக்கமுடியாத நினைவாக உள்ளது.

சி.கதீசனா,
ஊடகக் கற்கைகள்,
யாழ். பல்கலைக்கழகம்.


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA



# நாற்பதொரு ஆண்டுகளை கடக்கும் கறுப்பு ஜுலை... !

**நாற்பதொரு ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற கறுப்பு ஜுலைப் படுகொலை ஓர் இனத்துக்கு எதிரான அழிப்பு நடவடிக்கையாகவே தமிழ் மக்களால் கருதப்படுகிறது. சிங்களவர்கள் மற்றும் தமிழர்களுக்கிடையில் இனரீதியாக ஏற்பட்டிருந்த பிளவைச் சீர்செய்வதற்கு உரிய ஆக்க பூர்வமான நடவடிக்கைககளும் எந்த ஒரு அரசுகளாலும் மேற்கொள்ளப்படவில்லை என்பதே உண்மையாகும்.**

**- நவீனன்**

கறுப்பு ஜுலையின் கோர நிகழ்வுகள் தமிழரின் வரலாறுகளிலும், மனங்களிலும் ஒருபோதும் நீங்காத வடுக்களை பதித்துள்ளது. தமிழ்மக்கள் மேல் கட்ட விழ்த்த இனப்படுகொலை நீதி மறுக்கப்பட்டு, சர்வ தேசத்தால் மறக்கப்பட்டாலும் அதிலிருந்து கற்றுக் கொண்ட பாடங்களை போராடும் இனங்கள் தெளிவாக கற்று அறிய வேண்டும்.

1983, ஜுலை 24, 25 காலப் பகுதியில் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் சிங்கள படைத்துறையால் 100 பேர் வரையான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட


தங்கதுரை குட்டிமணி ஜெகன்

ழத் தமிழ் மண்ணில் எங்கும் பிணத்திரள்! எங்கும் பிணநெடி!

தங்கதுரை - குட்டிமணி - ஜெகன் உட்பட

37 பேர் படுகொலை!

சிறைக்குள் சிங்களவர் வெறியாட்டம்!

நிகழ்வுடன் ஆரம்பமாகி, வெலிக்கடை சிறைப்படு கொலை, பின்னர் தென்னிலங்கை இனப் படுகொலை யாக தொடர்ந்து நிகழ்த்தப்பட்டன. 1983 கருப்பு ஜுலையில் இரண்டு கிழமைகளுக்கு மேலாகத் திட்ட மிட்ட முறையில் சிங்கள இனவாதிகள் இலங்கைத் தமி ழர்களைக் கொடுமைப்படுத்தியும், சொத்துகளை அழித்தும் கைப்பற்றியும், 3000 பேர் வரை படு கொலை செய்தமை மானுட வரலாற்றில் துன்பவியல் நிகழ்வாகும்.

இந்த நிகழ்வின் ஒருங்கிணைப்பு முறை ஒரு திட்டமிட்ட படுகொலை செயற்பாடாகவே நம்பப்படு கிறது. கறுப்பு ஜுலை நிகழ்வுகளே இலங்கை இனப் பிரச்சினை ஆயுதப் போராட்டமாக மாறக் காரண மானதாகப் பார்க்கப்படுகின்றது.

### திட்டமிடப்பட்ட இனப்படுகொலை

கறுப்பு ஜுலை “இனக்கலவரம்” என்ற போர்வைக்குள் நடைபெற்றதே தமிழர் மீதான “இனப்படுகொலை” நிகழ்வாகும். ஆனால் கறுப்பு யூலை படுகொலைகள் ஏற்கனவே திட்டமிடப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்ட முறை யும் அளவும் அதற்கு அரச தரப்பில் இருந்த ஆதரவும் அதனை வெறும் இன வன்முறையாகக் கருத முடியாது. இந்நிகழ்வின் ஒருங்கிணைப்பு முறை ஒரு திட்டமிட்ட கட்டமைக்கப்பட்ட இனப் படுகொலை செயற்பாடாகவே ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

மூன்று தசாப்த காலமாக நடைபெற்ற தமிழ் மக்க ளின் அகிம்சை போராட்டம் தோற்றுப் போக தமிழ் இளைஞர்கள் மத்தியில் புரட்சிகர ஆயுதப் போராட்டமாக மாறுவதற்கு தேவையான வலிமையை கறுப்பு ஜுலை வலிகளில் இருந்தே ஈழத்து தமிழ் மக்கள் பெற்றார்கள் என்பதும் உண்மையே.

ஏற்கனவே திட்டமிட்டப்பட்டிருந்தபடி கொழும்பிலும் ஏனைய சிங்களப் பகுதிகளிலும் தமிழ் மக்கள் மீதான வன்முறைகளை ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் அரசு கட்டவிழ்த்துவிட்டது. உண்மையில் இக்கோர கறுப்பு யூலை நிகழ்வுகளே ஈழத்து தமிழ் இளைஞர்களை ஆயுதம் ஏந்தி போராட தூண்டியது என்றும் கூறலாம்.

### சிங்களப் பேரினவாத தரப்படுத்தல்

ஈழத் தமிழினம் டீ.எஸ். சேனநாயக்கா போன்ற சிங்களப் பேரினவாதத் தலைவர்களால் காலத்துக்குக் காலம் பொருளாதாரரீதியாகவும், நில உரிமை ரீதியாக வும், மொழி ரீதியாகவும் நயவஞ்சகமாகவும் நேரடியா கவும் நசுக்கப்பட்டுக் கொண்டிருந்தது. அவற்றுக்கு எதிராக அவ்வப்போது சில அரசியல் தலைவர்களது குரல் ஒலிப்பதும், சில அற்பசொற்ப சலுகைகளுக்காக அடங்கிப்போவதும் நாம் கண்ட வரலாறாகும்.

தமிழினத்தை தன்னிலைபற்றிச் சிந்தித்து, தனக் கென ஒரு நாடு தேவை என்ற தீர்வைக் கொடுத்தது

தொடர்ச்சி▼

# நாற்பதொரு ஆண்டுகளை கடக்கும் கறுப்பு ஜூலை... !



தொடர்ச்சி▲

என்னவோ, சிறீமாவோ பண்டாரநாயக்கா அம்மையாரது ஆட்சிக் காலத்தில் அமுல்படுத்தப்பட்ட 'தரப்படுத்தல்' என்ற தமிழ் மாணவரது கல்வியை நசுக்கும் செயல்தான் என்பதை எவராலுமே மறுக்கமுடியாது.

தரப்படுத்தல் சிவகுமாரன் போன்ற மாணவர்களை அகிம்சை வழியிலிருந்து விலகி ஆயுதங்கள் பக்கமாகச் சிந்திக்கத் தூண்டியது. அரச பயங்கரவாதச் சுரண்டல்களுக்குப் பரிகாரம் ஆயுதப் போராட்டமே என்ற எண்ணம் பல இளைஞருள்ளும் அக்காலத்தில் எழுந்தது.

அரச படை இயந்திரங்களை எதிர்த்துப் போரிட முடியுமா என்ற கேள்வியே ஈழத் தமிழினத்தால், குறிப்பாக தமிழின அரசியல் மேடைப்பேச்சுத் தலைவர்களால் நினைத்துப் பாராததொன்றாக இருந்தது. ஈழத்தமிழனின் கல்வியில் திணிக்கப்பட்ட தரப்படுத்தலானது இளைஞர்களை ஆயுதங்கள் பக்கமாகச் சிந்திக்கத் தூண்டியதும் வரலாற்று உண்மையாகும்.

திருநெல்வேலி தாக்குதலும் அதைத் தொடர்ந்து எழுந்த அரச பயங்கரவாத ஆதரவுடன் இடம்பெற்ற இனக்கலவரமும் ஈழப் போராட்ட அமைப்புகளின் பாரிய வளர்ச்சிக்கு வழிவகுத்தது.

### கறுப்பு ஜூலையில் வெலிக்கடை சிறை படுகொலை!

ஜூலை 1983 இல் இலங்கையில் இலங்கைத் தமிழர்களுக்கெதிராக இடம்பெற்ற கறுப்பு ஜூலை வன்முறை நிகழ்வுகளின் போது இடம்பெற்ற உச்சக்கட்ட நிகழ்வே வெலிக்கடை சிறைப் படுகொலையாகும்.


இதன் போது மொத்தம் 53 தமிழ் அரசியல் கைதிகள் கொழும்பின் அதி உயர் பாதுகாப்பு சிறைச்சாலையில் சக சிங்களக் கைதிகளால் குத்தியும் வெட்டியும் படுகொலை செய்யப்பட்டனர். இந்தப் படுகொலை நிகழ்வில் எவரும் இன்றுவரையில் குற்றஞ்சாட்டப்பட்டுத் தண்டிக்கப்படவில்லை.

வெலிக்கடை சிறைப் படுகொலை இரண்டாம் தடவையாக ஜூலை 28 ஆம் திகதி மீண்டும் இடம்பெற்றது. இதில் 18 பேர் வெட்டிக் கொல்லப்பட்டனர். இந்தப் படுகொலை நிகழ்வில் தப்பிப் பிழைத்தவர்களின் வாக்குமூலத்தின்படி சிறைச்சாலை அதிகாரிகளே அறைக்கதவுகளின் திறப்புகளை சிங்களக் கைதிகளுக்கு கொடுத்ததாக தெரிவித்தனர். ஆனால் சிறை அதிகாரிகளின் கூற்றுப்படி, சிங்களக் கைதிகள் தம்மிடம் இருந்து திறப்புகளைத் திருடினர் என்று தெரிவித்தனர்.

இப்படுகொலை நிகழ்வில் தப்பிப் பிழைத்தவர்களின் வாக்குமூலத்தின்படி சிங்கள இனவெறியர் அங்கு அமைக்கப்பட்டிருந்த புத்த விகாரையின் புத்தர் சிலையின் முன் கொல்லப்பட்ட குட்டிமணியின் உடலை நிர்வாணமாக்கிப் போட்டார்கள். இவ்வாறாக ஜெகனின் கண்களும் தோண்டப்பட்டு ஆணுறுப்பு வெட்டப்பட்டு அவரின் உடலும் நிர்வாணமாகப் புத்தர் சிலையின் முன்னால் வீசப்பட்டது.

காட்டுமிராண்டித் தனமான கூச்சல்களுக்கு மத்தியில் ஏனைய தமிழ் இளைஞர்களும் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டு, நிர்வாணமாக்கப்பட்டு புத்தரின் காலடியில் எறியப்பட்டனர்.

சிங்கள இன வெறியர்கள், தமிழிளைஞர்களின் தலைகள், கண்கள், கால்கள், கைகள், உடல்கள், செங்குருதி யாவற்றையும் புத்தருக்கு காணிக்கையாக அளித்தனர். இப்படுகொலைகள் நடைபெற்ற தினத்துக்கு முதல்நாள் புத்தர்களின் புனிதநாளான போயா தினமாகும். போயா தினத்தில் உபவாசம் இருந்து "சில்" அனுஷ்டித்தவர்கள் மறுநாள் இப்படுகொலையில் சம்பந்தப்பட்டிருந்தனர் என இப்படுகொலை நிகழ்வில் தப்பிப் பிழைத்தவர்களின் வாக்குமூலத்தில்



தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்களவர்கள் மற்றும் தமிழர்களுக்கிடையில் இனரீதியாக ஏற்பட்டிருந்த பிளவை சீர்செய்வதற்கு உரிய ஆக்க பூர்வமான நடவடிக்கைகளும் எந்த ஒரு அரசுகளால் மேற்கொள்ளப்படவில்லை.

நாற்பதொரு ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற இந்த இனப் படுகொலை ஓர் இனத்துக்கு எதிரான அழிப்பு நடவடிக்கையாகவே இலங்கைத் தமிழ் மக்களால் கருதப்படுகிறது.

# கடலோர பாதுகாப்பு சட்டங்கள் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன

## அமைச்சரவைப் பத்திரம் விரைவில் சமர்ப்பிப்பு



கடலோர பாதுகாப்பு தொடர்பான சட்டங்கள் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. கடற்கரை மாசுபாடு மற்றும் சட்டவிரோத கட்டுமானங்களை கட்டுப்படுத்துவதே இதன் நோக்கமாகும். இதன்படி கரையோர வளங்கள் மற்றும் கரையோர முகாமைத்துவத் திட்டம் புதுப்பிக்கப்படும் என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான அமைச்சரவை பத்திரம் விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்கக் கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவச் சட்டத்தின் கீழ், இலங்கையின் கரையோர வலயங்களை நிர்வகிப்பதற்கு "இலங்கை கரையோர வலயம் மற்றும் கரையோர முகாமைத்துவத் திட்டம்" தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை இந்தத் திட்டத்தைப் புதுப்பிக்க வேண்டும் என்பது சட்ட பூர்வமான தேவை. 2024 ஆம் ஆண்டில், இலங்கையின் கரையோர வலயங்கள் மற்றும் கரையோர முகாமைத்துவத் திட்டம் அதற்கேற்ப புதுப்பிக்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டில் தொகுக்கப்படவுள்ள இலங்கை கரையோர வலயம் மற்றும் கரையோர முகாமைத்துவத் திட்டம், 2008 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் தொகுக்கப்பட்ட திட்டங்களின் அமுலாக்கத்தின் முன்னேற்றம் மற்றும் அதன் போது எழுந்த நிதி, நிறுவன, தொழில்நுட்ப மற்றும் பிற சிக்கல்களை மையமாகக் கொண்டு தொகுக்கப்படும். அதன்படி, கடலோர முகாமைத்துவம், கடலோர சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நிலையான முகாமித்துவம், கடலோர மாசு கட்டுப்பாடு, சிறப்புமுகாமைத்துவப்பகுதிகள், ஒழுங்குமுறை பொறிமுறை ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஆய்வுகள் அந்தந்த விடயப் பிரிவுகள் தொடர்பான நிபுணர்கள் மற்றும் அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் அதிகாரிகளின் பங்கேற்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. சமூக அமைப்புகள் மற்றும் பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை கருத்தில் கொண்டு புதிய சட்டம் இயற்றப்படுகிறது.

இவ்வருடம் இரணவில, உப்பாறு, கீரிமுண்டலம், மூதூர், காரைதீவு, நிந்தவூர், புஸ்ஸ, தல்டியாவத்தை, கொக்கல, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, காத்தான்குடி மற்றும் உஸ்வதகையாவ ஆகிய கடற்பகுதிகளில் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தால் 14 அவசரகால கரையோரப் பாதுகாப்புத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அபிவிருத்திப் பணிகளுக்காக 520 மின் அனுமதிப் பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன. கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்தின் அறிக்கையின்படி, இவ்வருடம் ஏற்கனவே 30 கடற்கரை தூய்மைப்படுத்தும் வேலைத் திட்டங்களும் 04 சதுப்புநில நடவு வேலைத் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதற்காகச் செலவிடப்பட்ட தொகை 300 மில்லியன் ரூபா.

இந்த ஆண்டில், கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள மேலாண்மைத் திணைக்களம் 11 கடலோரப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. களுத்துறை கலிடோ, லுனாவ, வடக்கு உடப்பு, நிந்தவூர், சாய்ந்தமருது, மூதூர், மடிஹ, முதுகடுவ, கஹவ, இரணவில மற்றும் பண்டாரமுல்ல ஆகிய பகுதிகளில் இத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

கடந்த ஆண்டு கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் 7 கடலோரப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. மொரட்டுவை, களுத்துறை, கலிடோ, அம்பலாங்கொடை, போருதொட்டை, சாய்ந்துமருது, நிந்தவூர் மற்றும் திருக்கோவில் ஆகியவை அந்த கடற்கரைகளாகும். அதற்காக ஒதுக்கப்பட்ட தொகை 388.35 மில்லியன் ரூபா. 2023 ஆம் ஆண்டில் 102 கடற்கரையை சுத்தம் செய்யும் திட்டங்கள் மற்றும் 25 சதுப்பு நிலத் தாவரங்கள் நடும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாக கடலோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் இரணவில, உப்பாறு, கீரிமுண்டலம், மூதூர், காரைதீவு, நிந்தவூர், புஸ்ஸ, தல்டியாவத்தை, கொக்கல, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, காத்தான்குடி, உஸ்வதகேயாவ, மருதமுனை ஆகிய கடற்கரைகளில் 20 அவசரகால பாதுகாப்புத்திட்டங்கள்முன்னெடுக்கப்பட்டன. சுமார் 342 மீட்டர் பயனுள்ள கடற்கரை பாதுகாக்கப்பட்டுள்ளது என்று கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# களனி வெளி பெருந்தோட்டத் தொழிலாளர்கள் இன்று காலை தொடக்கம் பணிபுறக்கணிப்பில்

(ஆ.ரமேஸ்)

நுவரெலியா மாவட்டத்தில் இயங்கும் களனி வெளி பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்துக்கு உரிய அனைத்து பெருந்தோட்டங்களிலும் தொழிலாளாளர்கள் தமது வழமையான தேயிலை தொழிலை ஸ்தம்பித்தப்படுத்தி பணி புறக்கணிப்பில் இன்று (23) காலை ஈடுபட்டனர்.

இரண்டு முக்கிய காரணங்களை முன்வைத்து இந்தப் பணிப்புறக்கணிப்பில் இன்று (23) செவ்வாய்கிழமை முதல் களம் இறங்கியுள்ளனர் என்று பணி புறக்கணிப்பில் ஈடுப்பட்டுள்ள தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

1700 ரூபா சம்பளத்தை தர மறுக்கும் களனிவெளி கம்பனி தொழிலாளர்கள் அடி வயிற்றில் அடித்து அடாவடி போக்கை கடைப்பிடிப்பதாகவும், இத்தகைய அடாவடிப் போக்கை கண்டித்த அமைச்சர் ஜீவன் தொண்டமான் மீது நீதி மன்ற நடவடிக்கை எடுத்து அவரை கைது செய்ய இந்த கம்பனி நடவடிக்கை எடுத்ததை கண்டித்தும் இந்த பணிபுறக்கணிப்பு செய்யப்படுவதாகவும் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

அந்த வகையில் களனிவெளி பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் கீழ் இயங்கும் நுவரெலியா பீட்று தோட்டத்துக்கு கீழ் இயங்கும் பீட்று, லவர்சிலீப், நேஸ்பி, மூன்பிளேன், மாகாஸ்தோட்ட, ஸ்கிராப் ஆகிய தோட்டங்களுடன் ஒலிபண்ட் மற்றும் நுவரெலியா டிவிஷன் ஆகிய தோட்டங்களிலும் தொழிலாளர்கள் பணி புறக்கணிப்பில் ஈடுப்பட்டுள்ளனர்.

அதேபோல நானுஓயா பிரதேசத்தில் களனிவெளி பெருந்தோட்ட முகாமைத்துவ நிர்வாகத்தின் கீழ் இயங்கும் எடின்புரோ, கிளாசோ, ஆடிவன், மற்றும் கிளாஸோ மேல் பிரிவு கீழ் பிரிவு ஆகிய தோட்டங்களை சேர்ந்த தொழிலாளர்களும் மற்றும் உடரதல்ல மேல் மற்றும் கீழ் பிரிவு தோட்டங்களை சேர்ந்த தொழிலாளர்களும் பணி பறக்கணிப்பில் ஈடுப்பட்டுள்ளனர்.

அதேநேரத்தில் களனிவெளி பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் கீழ் இயங்கும் தோட்ட தொழிலாளர்களுக்கு ஆதரவாக ஹேலீஸ் பெருந்தோட்ட நிர்வாகத்தின் கீழ் இயங்கும் ரதல்ல மேல்பிரிவு தொழிலாளர்களும், வங்கி ஓயா கீழ் பிரிவு தொழிலாளர்களும் பணிபுறக்கனிப்பில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# திருக்கேதீஸ்வரத்தில் இரண்டு பாடசாலைகளுக்கு கற்றல் உபகரணம் வழங்கிய இணைந்தகரங்கள்




( வி.ரி.சகாதேவராஜா)

மன்னார் மாவட்டத்திலுள்ள திருக்கேதீஸ்வரம் இந்து சமய தமிழ் கலவன் பாடசாலை மற்றும் மினுக்கன் அரசினர் முஸ்லீம் பாடசாலை ஆகிய இரு பாடசாலை மாணவர்களுக்கு இணைந்த கரங்கள் அமைப்பால் கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப் பைகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு பாடசாலையின் அதிபர். பி.சே. தட்குருஸ் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது 45 மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டக.

'ஏழ்மையை ஒழிப்போம் கல்வியை விதைப்போம்' எனும் தொனிப்பொருளில் இணைந்த கரங்கள் அமைப்பானது மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை பல கஸ்ர பிரதேசங்களில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு கடந்த இரண்டு வருடங்களாக வழங்கி வருகின்றது .

இந்தப் பாடசாலைகள் கடந்த காலங்களில் யுத்ததித்தால் பாதிப்படைந்த பாடசாலைகளாகும்.

இணைந்த கரங்கள் இலங்கையில் இனமதம் மொழி பாராமல் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் மற்றும் மேலதிக கல்வி செயற்பாட்டுக்கான நிதி உதவியை வழங்கி வருகின்றது.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட வலயக் கல்வி அலுவலகத்தில் ஆசிரிய வாண்மை விருத்தி முகாமையாளர் சோமஸ் பெரேறா , இரு பாடசாலையின் ஆசிரியர்கள், இணைந்த கரங்கள் அமைப்பின் உறுப்பினர்களான காந்தன், சுரேஸ்விவேக், .ஆனந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

45 மாணவர்களுக்கான பாடசாலைக்கு செல்வதற்கு தேவையான கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பைகள் என்பவற்றை வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தெல்லிப்பழை மகாஜனா மாணவர்கள் தேசிய மட்ட கராத்தே போட்டிக்குத் தெரிவு





(அஸ்ஹர் இப்றாஹிம்)

வடக்கு மாகாண மட்ட கராத்தே போட்டியில் தெல்லிப்பளை மகாஜனா கல்லூரி பெண்கள் பிரிவில் முதலிடமும் ஆண்கள் பிரிவில் மூன்றாமிடமும் பெற்று இருவரும் தேசிய மட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ளனர்.

வட மாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான 18 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான கராத்தேப் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி மாணவி ஐங்கரன் மிசாயினி முதலாம் இடத்தையும், 16 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான கராத்தே போட்டியில் ஐங்கரன் சாகித்தியன் மூன்றாம் இடத்தையும் பெற்று இருவரும் தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் போட்டி கொக்குவில் இந்துக் கல்லூரியில் இடம்பெற்றன.





# 7ஆவது முறையாகவும் பட்ஜெட்டை தாக்கல் செய்தார் நிர்மலா சீதாராமன்

**(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)**

இந்தியாவின் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தொடர்ந்து 7-ஆவது முறையாக பட்ஜெட்டை தாக்கல் செய்து சாதனை படைத்தார்.

"இந்தியாவில் விலைவாசி விகிதம் கட்டுக்குள் உள்ளது. எங்களுடைய அரசில் இளைஞர்கள் பெண்கள், விவசாயிகள், ஏழைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு இந்த பட்ஜெட் தயாரிக்கப்பட்டு உள்ளது. சர்வதேச பொருளாதாரத்தில் நிச்சயமற்ற தன்மை உள்ளது. எனினும், இந்தியாவின் வளர்ச்சி பிரகாசத்துடன் காணப்படுகிறது. நாட்டில் பணவீக்கம் குறைவாகவே இருந்து வருகிறது" என்று இன்று நாடாளுமன்றத்தில் பட்ஜெட்டில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்தார்.

மத்திய பட்ஜெட் தாக்கல் செய்யப்படஇருந்த நிலையில், முன்னதாகப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் அதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் இன்று செவ்வாய்க்கிழமை பட்ஜெட்டை தாக்கல் செய்ய முன்னர், ஜனாதிபதி திரௌபதி முர்முவை சந்தித்து வாழ்த்து பெற்றார்.

அவருடன் நிதித்துறை இணையமைச்சர் பங்கஜ் சௌத்ரி, தலைமைப் பொருளாதார ஆலோசகர் ஆனந்த நாகேஸ்வரன், மத்திய நிதியமைச்சக அதிகாரிகளும் ஜனாதிபதியை சந்தித்தனர்.

மத்திய பட்ஜெட்டை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்வதற்கு முன்னதாக பிரதமர் மோடி தலைமையிலான அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தொடர்ந்து 7-ஆவது முறையாக பட்ஜெட்டை தாக்கல் செய்து சாதனை படைத்தார்.

நாடாளுமன்றத்தில் மத்திய பட்ஜெட் 2024-ஐ தாக்கல் செய்த மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பேசியவை வருமாறு:-

பா.ஜ.க. 3 ஆவது முறையாக ஆட்சியமைக்கும் வகையில், எங்களுடைய கொள்கைகள் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்ததற்காக மக்களுக்கு நன்றி தெரிவித்து கொள்கிறேன். நாட்டில் விலைவாசி விகிதம் கட்டுக்குள் உள்ளது. எங்களுடைய அரசில் இளைஞர்கள் பெண்கள், விவசாயிகள், ஏழைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு இந்த பட்ஜெட் தயாரிக்கப்பட்டு உள்ளது.

இந்திய பொருளாதாரம் தொடர்ந்து வளர்ந்துகொண்டிருக்கிறது. நாட்டின் பணவீக்கம் தொடர்ந்து நிலைத்தன்மையுடனும், 4 சதவீதம் என்ற இலக்கை நோக்கியும் பயணிக்கிறது. சர்வதேச பொருளாதாரத்தில் நிச்சயமற்ற தன்மை உள்ளது. எனினும், இந்தியாவின் வளர்ச்சி பிரகாசத்துடன் காணப்படுகிறது. நாட்டில் பணவீக்கம் குறைவாகவே இருந்து வருகிறது. 4 கோடி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு திறன் பயிற்சி அளிக்கப்படும். திறன் மேம்பாடு, சிறு, குறு நிறுவனங்கள், நடுத்தர வர்க்கத்தினர் மேம்பாட்டிற்காக பணியாற்றி வருகிறோம். கல்வி, தொழில்திறன் மேம்பாடு, வேலை வாய்ப்புகளுக்கு ரூ.1.48 லட்சம் கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது. கரீப் அன்னயோஜனா திட்டம் அடுத்த 5 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்படும். அரசின் இந்த திட்டத்தினால், 80 கோடி மக்கள் பயன் பெறுவார்கள்.

ஏழைகள், பெண்கள், இளைஞர்கள், விவசாயிகளை அடிப்படையாக கொண்டு இடைக்கால பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. கரீப் அன்ன யோஜானா திட்டம் அடுத்த 5 ஆண்டுகளுக்கு நீட்டிப்பதன் மூலம் 80லட்சம் கோடி பேர் பயன் பெறுவர்.திறன் மேம்பாடு, சிறு, குறு நிறுவனங்கள், நடுத்தர வர்த்தகத்தினர் மேம்பாட்டில் கவனம் செலுத்துகிறோம். 4 கோடி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு திறன் பயிற்சி அளிக்கப்படும். கல்வி, தொழில்திறன் மேம்பாடு, வேலை வாய்ப்புகளுக்கு ரூ.1.48 லட்சம் கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆந்திர மாநில வளர்ச்சிக்காக ரூ.15,000 கோடி சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யப்படும். பீகார், ஆந்திரா ஆகிய மாநிலங்களுக்கு பட்ஜெட்டில் சிறப்புத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. ஆந்திர மாநில வளர்ச்சிக்காக ரூ.15 ஆயிரம் கோடி சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யப்படும். பீகாரில் விமான நிலையங்கள், மருத்துவக்கல்லூரிகள் அமைக்க கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பீகாரில் சாலைகள், மேம்பாலங்கள் அமைக்க ரூ. 26,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும். பீகார் மாநிலம் கயா பகுதியில் தொழில்த்துறை முனையம் அமைக்கப்படும். ஹைதராபாத் - பெங்களூரு பாதுகாப்பு தளவாட தொழில் வழித்தடம் திட்டம் தொடங்கப்படும். ஆந்திராவில் நதிநீர், சாலை மேம்பாடு என பல்வேறு திட்டங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. சிறு, குறு தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்காக பல்வேறு நிதியுதவி திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் உள்நாட்டு உயர் கல்வி நிறுவனங்களில் மேற்படிப்பு பயில ரூ.10 லட்சம் கல்விக்கடன் வழங்கப்படும். புதிதாகப் பணியில் சேரும் இளைஞர்களுக்கு ஒரு மாத சம்பளம் அரசு சார்பில் வழங்கப்படும். இபிஎஃப்ஓ-வில் பதிவு செய்யப்பட்டு ரூ.15 ஆயிரம் முதல் ரூ.1 லட்சம் வரை பெறும் இளைஞர்களுக்கு ஒரு மாதம் சம்பளம் வழங்கப்படும். இத்திட்டம் மூலம் 30 லட்சம் இளைஞர்கள் பயன்பெறுவர். இந்தியாவில் 500 முன்னணி நிறுவனங்களில் 1 கோடி இளைஞர்களுக்கு பணி அனுபவம் பெறும் வகையில் இன்டர்ன்ஷிப் பயிற்சி அளிக்கப்படும்.

நாடு முழுவதும் 20 தொழிற்பேட்டைகள் அமைக்கப்படும். இந்தியா முழுவதும் ஒரு லட்சம் மாணவர்களின் கல்விக்கடனுக்கான வட்டி ரத்து செய்யப்படும்.

மாணவர்களை ஊக்குவிக்க உயர்க்கல்வி பயில ரூ.10 லட்சம் வரை கடனுதவி அளிக்கப்படும்.

இந்தியா முழுவதும் புதிதாக 12 தொழிற்பூங்காக்கள் உருவாக்கப்படும். தொழிலாளர்களுக்கு குறைந்த விலையில் வாடகை குடியிருப்பை உருவாக்கும் திட்டம் செயல்படுத்தப்படும். அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் கூடிய இ-காமர்ஸ் ஏற்றுமதி மையங்கள் அமைக்கப்படும்.உள்நாட்டில் உள்ள தாதுக்கள், கனிம வளங்களை மறுசுழற்சி செய்யும் வகையில் புதிய திட்டம். புதிய சாலை இணைப்பு திட்டங்களை மேம்படுத்த ரூ.26,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும். திவாலான நிதி நிறுவனங்களிடம் இருந்து மக்களுக்கு பணத்தை பெற்றுத்தர ஆணை

தொடர்ச்சி▼



# 7ஆவது முறையாகவும் பட்ஜெட்டை தாக்கல் செய்தார் நிர்மலா சீதாராமன்

**தொடர்ச்சி▲**

யம் அமைக்கப்படும். மாநில அரசு, வங்கிகளுடன் இணைந்து நகர்ப்புற திடக்கழிவு மேலாண்மைக்கு புதிய திட்டம். உள்நாட்டு உற்பத்தியில் 3.4% உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு ஒதுக்கப்பட்டது. நாட்டின் உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டங்களுக்கு மேலும் ரூ.11.11 லட்சம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. பீகார் மாநில வெள்ள தடுப்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்கு ரூ.11,500 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. பீகாரில் 2400 மெகா வாட் மின் உற்பத்தி செய்யும் வகையில் ஆலைகள் அமைக்க ரூ.21,400 கோடி ஒதுக்கப்பட்டது. பழங்குடியின மக்களுக்கான சிறப்பு திட்டங்களை செயல்படுத்த ரூ.5 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. 25,000 ஊரக வாழ்விடங்களை இணைக்கும் வகையில் கிராம சாலை திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அசாம், இமாச்சல், உத்தரகாண்ட் மாநிலங்களில் மறுகட்டமைப்பு மேற்கொள்ள நிதி வழங்கப்படும்.

புற்றுநோய் நோயாளிகளுக்கான மேலும் 3 மருந்துகளுக்கு சுங்க வரியில் இருந்து முற்றிலும் விலக்களிப்படும். செல்போன் மற்றும் சார்ஜர்களுக்கான சுங்கவரி 15 சதவீதமாக குறைக்கப்படும். விண்வெளி ஆராய்ச்சி திட்டங்களுக்கு ரூ.1,000 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். தனியார் நிறுவனங்களுடன் இணைந்து சிறு அணு மின் நிலையங்களை அமைக்கத் திட்டமிட்டுள்ளது. தங்கம், வெள்ளிக்கு இறக்குமதி வரி 15 சதவீதத்தில் இருந்து 6 சதவீதமாக குறைக்கப்படுகிறது.

பிளாட்டினத்துக்கான இறக்குமதி வரி 12 சதவீதத்தில் இருந்து 6.4 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது.

**வரிகள் சார்ந்த அறிவிப்புகள்:**

பிளாஸ்டிக் பொருட்களுக்கான இறக்குமதி வரி உயர்த்தப்படுகிறது.

வருமான வரி செலுத்துவோரில் 3 இல் 2 மடங்கு பேர் புதிய நடைமுறைக்கு மாறியுள்ளனர்.

ஆன்லைன் வர்த்தகத்துக்கான டிடிஎஸ் பிடிப்பு குறைக்கப்படுகிறது.

டிடிஎஸ் தாக்கலில் நிகழும் தாமதம் இனி கிரிமினல் குற்றமாக கருதப்படாது.

அறக்கட்டளைகளுக்கு இரட்டை வரி முறை நீக்கப்பட்டு, அதே ஒரே வரி முறையாக நடைமுறைப் படுத்தப்படும்.

முதலீட்டாளர்களுக்கான 'ஏஞ்சல் டாக்ஸ்' ரத்து செய்யப்படுகிறது.

நாட்டின் 500 முன்னணி நிறுவனங்களில் 1 கோடி இளைஞர்களுக்கு பணி அனுபவம் பெறும் வகையில் இன்டர்ன்ஷிப் பயிற்சி அளிக்கப்படும். இன்டர்ன்ஷிப் திட்டத்தின் கீழ் ஒருமுறை உதவியாக இளைஞர்களுக்கு 6,000 ரூபா வழங்கப்படும்.

புற்றுநோய் சிகிச்சை தொடர்பான 3 மருந்துகளுக்கு சுங்கவரி முற்றிலும் ரத்து செய்யப்படுகிறது. தொழில் முதலீட்டாளர்களுக்கான ஏஞ்சல் வரி ரத்து செய்யப்படுகிறது.2024-25 நிதியாண்டுக்கான மூலதன செலவினத்துக்கு ரூ.11.11 லட்சம் கோடி ஒதுக்கீடு 2024-25 நிதியாண்டிற்கான கடன் அல்லாத மொத்த வரவுகள் ரூ.2.07 லட்சம் கோடியாக மதிப்பீடு, மொத்த செலவு ரூ.48.21 லட்சம் கோடி, நிகர வரி வரவு ரூ.25.83 லட்சம் கோடி, நிதிப் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.9% ஆக கணக்கீடு!புதிய வருமான வரி முறையில் ஆண்டு வருமானம் ரூ.3 லட்சம் வரை உள்ளவர்களுக்கு வரி இல்லை. இணைய வழி வணிக நிறுவனங்களுக்கான TDS 0.1 சதவீதமாக குறைப்பு.புதிய வருமான வரி முறையில் வரி சலுகை பெறுவதற்கான நிரந்தர கழிவு ரூ.50 ஆயிரத்தில் இருந்து ரூ.75 ஆயிரமாக உயர்வு.தங்கம், வெள்ளி மீதான சுங்கவரி 6 சதவீதமாக குறைக்கப்படும். சுங்கவரி குறைக்கப்படுவதால் தங்கம், வெள்ளி விலை குறைகிறது. தாமிரம் மற்றும் உருக்கு இறக்குமதி வரிகளும் குறைக்கப்படும். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடா ளுமன்றத்தில் பட்ஜெட்டில் தாக்கல் செய்யப்பட்டது. ஒருமனதாக குரல் வாக்கெடுப்பில் மூலமாக நிறைவேற்றப்பட்டது.







# குரோஷியாவில் முதியோர் இல்லத்திற்குள் துப்பாக்கிச் சூடு; 6 பேர் பலி; 6 பேர் காயம்

**ஜாக்ரப், ஜூலை 23**

குரோஷியா நாட்டின் தாருவார் நகரில் முதியோர்களுக்கான தனியார் இல்லம் ஒன்றுக்குள் மர்ம நபர் ஒருவர் திடீரென உள்ளே புகுந்து துப்பாக்கி சூடு நடத்தினார். இதில், சம்பவ இடத்திலேயே 5 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

இதுபற்றி குரோஷிய காவல் தலைவர் நிகோலா மிலினா கூறும்போது, இந்த சம்பவத்தில், இல்லத்தில் தங்கியிருந்த 5 பேர் உயிரிழந்தனர். ஊழியர் ஒருவரும் பலியாகி உள்ளார். மொத்தம் 6 பேர் பலியானார்கள். 6 பேர் காயமடைந்தனர்.

இந்த சம்பவத்தில் தொடர்புடைய நபர், கடந்த காலத்திலும் இதுபோன்ற சம்பவங்களில் ஈடுபட்டிருக்கிறார். அவர் இராணுவப் பொலிஸ் படை பிரிவில் ஒருவராக இருந்துள்ளமையுடன், பதிவு செய்யப்படாத சிறிய துப்பாக்கியையும் வைத்திருந்திருக்கின்றார். இந்த தாக்குதல் பற்றி விசாரணைக்கு பின்னரே எதுவும் கூற முடியும். – எனக் கூறியுள்ளார்.

இந்த நிலையில், துப்பாக்கி சூடு நடத்தியதும் தப்பியோடிய நபர், பின்னர் உணவு விடுதி ஒன்றில் வைத்து கைது செய்யப்பட்டார். இந்த சம்பவத்திற்கு அந்நாட்டு பிரதமர் ஆண்டிரெஜ் பிளென்கோவிக் இரங்கல் தெரிவித்து கொண்டமையுடன், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைந்து வருவார்கள் என நம்பிக்கை தெரிவித்து உள்ளார்.

துப்பாக்கி சூடு தாக்குதல் நடந்த பகுதிக்கு துணை பிரதமர் தவோர் பொஜினோவிக், சுகாதார மந்திரி விலி பெரோஸ் உள்ளிட்டோர் செல்வார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

# உக்ரைனுக்கு வழங்கும் ராணுவ உதவியை மேலும் அதிகரிப்பதற்கு நேட்டோ முயற்சி



**பிரஸ்சல்ஸ், ஜூலை 23**

உக்ரைனுக்கு உதவ நேட்டோ கூட்டமைப்பை சேர்ந்த 5 லட்சம் இராணுவ வீரர்கள் தயார் நிலையில் இருக்கின்றனர் எனத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகின் மிகப்பெரிய இராணுவக் கூட்டமைப்பான நேட்டோ பெல்ஜியத்தை தலைமையிடமாகக் கொண்டு செயல்படுகிறது. இந்த கூட்டமைப்பில் தற்போது 32 நாடுகள் உள்ளன. இதன் கடைசி உறுப்பு நாடாக சுவீடன் கடந்த மார்ச் மாதம் இணைந்தது. இந்த கூட்டமைப்பில் இணைய உக்ரைனும் பல ஆண்டுகளாக முயற்சித்து வருகிறது.

ஆனால் சில உறுப்பு நாடுகளின் எதிர்ப்பால் உக்ரைனால் இன்னும் இணைய முடியவில்லை. இதற்கிடையே உக்ரைனின் இந்த முயற்சிக்கு எதிர்ப்பு தெரிவித்து ரஷ்யா அதன் மீது போர் தொடுத்தது. எனவே உக்ரைனுக்கு ஆதரவாக நேட்டோ கூட்டமைப்பில் உள்ள நாடுகள் பல்வேறு உதவிகளை வழங்குகின்றன. அவற்றின் மூலம் உக்ரைனும் ரஷ்யாவுக்கு பதிலடி கொடுத்து வருகிறது.

இந்தநிலையில் நேட்டோ கூட்டமைப்பைச் சேர்ந்த 5 லட்சம் இராணுவ வீரர்கள் தயார் நிலையில் உள்ளனர். எனவே ரஷியாவை தனிமைப்படுத்தவும், உக்ரைனுக்கு வழங்கப்படும் இராணுவ உதவிகளை மேலும் அதிகரிக்கவும் முயற்சிகள் நடைபெறுவதாக நேட்டோ செய்தித்தொடர்பாளர் பரா தக்லல்லாஹ் கூறினார்.

கனடா முரசு
பக்கங்கள் - 7
செவ்வாய்க்கிழமை 23/07/2024

## கர்ப்பிணியும் குழந்தையும் விபத்தில் உயிரிழந்தனர்!

**ஒன்ராரியோ, ஜூலை 21**
இந்த வார தொடக்கத்தில் டொரான்டோ டவுன்டவுனில் செடான் வாகனத்தால் தாக்கப்பட்ட கர்ப்பிணிப் பெண்ணின்

C2 ▶

# வட்டி விகிதம் இன்று குறைப்பு?

**ஒன்ராரியோ, ஜூலை 23**
இந்த வாரம் கனடிய மத்திய வங்கி வட்டி விகிதங்களை குறைக்கும் என எதிர்வு கூறப்படுகிறது.

மீண்டும் இரண்டு முறை இந்த ஆண்டு, மத்திய வங்கி வட்டி விகிதங்களை குறைக்கும் எனவும் கூறப்படுகிறது.

மத்திய வங்கி அடுத்த வட்டி விகித அறிவிப்பு நாளை புதன்கிழமை வெளியாகிறது.

புதன்கிழமை மத்திய வங்கி அதன் வட்டி விகிதத்தை 25 அடிப்படை புள்ளிகளால் குறைக்கும் என எதிர்வு கூறப்படுகிறது.

இதன் மூலம் வட்டி விகிதம் 4.50 சதவீதமாக குறையும்.

பணவீக்கம் தொடர்ந்து குறையும் என்ற எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் இந்த ஆண்டு மேலும் வட்டி விகித குறைப்புகள் பொருளாதார வல்லுநர்களினால் எதிர்வு கூறப்படுகிறது.

இந்த ஆண்டின் இறுதிக்குள் வட்டி விகிதம் 4 சதவீதமாக குறையும் என பொருளாதார வல்லுநர்கள் சிலர் கணித்துள்ளனர்.



# காசா எல்லையில் கனடியர் நேற்றுச் சுட்டுக்கொலை!

## இஸ்ரேல் படையினரை கத்தியைக் காட்டி மிரட்டினாராம்

**ஒன்ராரியோ, ஜூலை 23**
காசா எல்லையில் இஸ்ரேலிய பாதுகாப்புப் படையினரை கத்தியைக் காட்டி மிரட்டிய கனடியர் ஒருவர் நேற்றுத் திங்கட்கிழமை கொல்லப்பட்டார் என இஸ்ரேலியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேல் எல்லைக்கு அருகில் உள்ள நகரத்தின் நுழைவாயிலுக்கு வாகனத்தை ஓட்டிச் சென்ற அவர், கத்தியுடன் பாதுகாப்புப் படையினரை அணுகினார் என இஸ்ரேலிய இராணுவம் கூறுகிறது.

இஸ்ரேலிய படைகள் துப்பாக்கிச் சூடு நடத்தி அந்த நபரைக் கொன்றனர்.

இந்தச் சம்பவத்தில் வேறு எவருக்கும் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை.

இதில் பலியானவர் குறித்த விவரங்கள் எதுவும் வெளியாகவில்லை.

# டொரன்ரோவில் வாடகைக் குடியிருப்பாளர்களை பாதுகாக்கும் நோக்கில் புதிய சட்டம் வருகின்றது

**ஒன்ராரியோ, ஜூலை 23**
டொரன்ரோவில் வாடகைக் குடியிருப்பாளர்களைப் பாதுகாக்கும் நோக்கில் புதிய சட்டம் உருவாக்கப்பட உள்ளது.

வாடகைக் குடியிருப்பாளர்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படும் சில அநீதியான விடயங்களைக் கருத்தில் கொண்டு இந்தப் புதிய சட்டம் உருவாக்கப்பட உள்ளது.

டொரன்ரோ நகரப் பேரவையினால் இந்தப்புதிய சட்டம் குறித்து முன்மொழியப்பட உள்ளது.

குறிப்பாக டொரன்ரோவில் வாடகைக்கு குடியிருப்போரை, வீட்டு உரிமையாளர்கள் திடீரென வீட்டை விட்டு வெளியேற்றுவதனைத் தடுக்க புதிய சட்டம் வழி செய்யும்.

வீடுகளைப் பழுது பார்ப்பதாக அல்லது

C2 ▶





# பிரதமர் ட்ரூடோவுக்கு கொலை மிரட்டல்: கனேடியர் இருவர் பொலிஸாரால் கைது!

கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ உட்பட முக்கிய அரசியல்வாதிகளுக்கு கொலை மிரட்டல் விடுத்த வழக்கில் இருவர் கைதாகியுள்ளனர்.

பெடரல் அரசியல்வாதிகளைக் கொல்லப் போகின்றனர் என அச்சுறுத்தினர் எனக் குறிப்பிட்டு அல்பர்ட்டாவை சேர்ந்த இருவர் தனித்தனி விசாரணைகளில் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

கனடாவின் INSET அமைப்பு திங்களன்று மதியத்திற்கு மேல் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், மே 10 ஆம் திகதி சமூக ஊடகப் பக்கம் ஒன்றில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்ட பதிவை பயனர் ஒருவர் பதிவிட்டுள்ளார் எனத் தெரிய வந்ததாக குறிப்பிட்டுள்ளது.

இதனையடுத்து முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் முடிவில், ஜூன் 6 அம் திகதி கல்கரி பகுதியில் வசிக்கும் 23 வயது Mason John Baker மேசன் ஜோன் மேக்கர் என்பவர் அடையாளம் காணப்பட்டு, அவர் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஜூன் 7 ஆம் திகதி, இதுபோன்ற இன்னொரு வழக்கில், பிரதமர் ட்ரூடோ, துணைப்பிரதமர் கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட் மற்றும் என்.டி.பி. தலைவர் ஜக்மீத் சிங் ஆகியோருக்கு எதிராக சமூக ஊடக பயனர் ஒருவர் கொலை மிரட்டல் விடுத்தார் எனக் குறிப்பிட்டு எட்மண்டன் பகுதியில் வசிக்கும் 67 வயது கரி பெல்ஸ்விக் என்பவர் கைது செய்யப்பட்டார் என INSET அமைப்பு தெரிவித்துள்ளது.

சமூக ஊடகத்தில் யார் வேண்டுமானாலும் எந்த கருத்தையும் பதிவு செய்யலாம், தங்கள் செயல்களும் சொற்களும் விளைவுகளை ஏற்படுத்தா என்ற நம்பிக்கை பொதுவாக ஏற்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ள அதிகாரி ஒருவர், ஆனால் எல்லையை மீறும் போது நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயத்திற்கு அதிகாரிகள் தள்ளப்படுகின்றனர் எனத் தெரிவித்துள்ளார். கைதான இருவரும் இன்று செவ்வாய்க்கிழமை மற்றும் வியாழக்கிழமையில் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளனர்.

## கர்ப்பிணியும்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குழந்தையும் இறந்துவிட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஜூன் 18ஆம் திகதி பிற்பகல் குயின் ஸ்ட்ரீட் ஈஸ்ட் மற்றும் சாக்வில்லி தெரு பகுதியில் நடந்த சம்பவம் குறித்து நேற்றைய தினம் டொரன்டோ பொலிஸார் மேலதிக தகவலை வழங்கியுள்ளனர்.

42 வயதான கர்ப்பிணிப் பெண், குயின் ஸ்ட்ரீட் ஈஸ்ட் பகுதியில் பாதசாரி கடவையில் நடந்து சென்றபோது, 70 வயது முதியவர் ஓட்டிச் சென்ற 2017 பிளாக் காடிலாக் செடான் அவர் மீது மோதியுள்ளது.

பலத்த காயங்களுக்கு உள்ளான பெண் உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார் எனவும், அங்கு அவர் உயிரிழந்தார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

'குழந்தையை பிரசவிப்பதற்கும் காப்பாற்றுவதற்கும் உயிர்காக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன,' ஆனால் வெள்ளிக்கிழமை, குழந்தை உயிரிழந்துள்ளது.

## டொரன்ரோவில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புதுப்பிப்பதாகக் கூறி வாடகை வீட்டில் குடியிருப்போர் வெளியேற்றப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கூடுதல் தொகைக்கு வீட்டை வாடகைக்கு விடும் நோக்கின் இவ்வாறு வாடகைக் குடியிருப்பாளர்கள் வெளியேற்றப்படுவது வழமை என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

குறிப்பாக வீடுகள் புனரமைக்கப்பட உள்ளன எனக் கூறி ஒப்பந்த காலத்திற்கு முன்னதாகவே வீட்டு உரிமையாளர்களினால் வாடகைக் குடியிருப்பாளர்கள் வெளியேற்றப்படுகின்றனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையினால் வாடகைக் குடியிருப்பாளர்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்களைத் தடுக்கும் வகையில் புதிய சட்ட வரைவு குறித்துக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த புதிய சட்டமானது எதிர்வரும் 2025 ஆம் ஆண்டளவில் நடைமுறைக்கு கொண்டு வரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கனடாவில் கற்றவர் கமலா ஹரிஸ்







அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹரிஸ் ஜனநாயக கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறான ஒரு பின்னணியில் ஹரிஸ் கனடாவுடன் எவ்வாறு தொடர்புபட்டுள்ளார் என ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

அந்த வகையில் இந்தியாவை பூர்வீகமாகக் கொண்ட கமலா ஹரிஸ், கனடிய உயர்நிலை பள்ளியொன்றில் கல்வி கற்றுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

மொன்றியாலில் காணப்படும் மொன்றியாலின் வெஸ்ட் மவுண்ட் உயர்நிலைப் பள்ளியில் ஹரிஸ், 1978 ஆம் ஆண்டு முதல் 1981 ஆம் ஆண்டு வரையில் அவர் கற்றுள்ளார்.

ஹரிஸின், கமலா ஹரிஸின், தயாரான சியாமளா கோபாலன் மார்பக புற்றுநோய் குறித்த ஓர் ஆய்வாளர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சியமளா மொன்றியாலில் கடமை ஆற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

கமலா ஹரிஸ் மற்றும் அவருடைய சகோதரி மாயா ஹரிஸ் ஆகியோர் கனடாவில் பள்ளிக்கூடத்தில் கற்றபோது சிறந்த திறமையான மாணவியர்களாக செயல்பட்டனர் என அவர்களது வகுப்புத் தோழர்கள் தெரிவிக்கின்றனர்.

ஜனநாயக கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக கமலா ஹரிஸ் போட்டியிடுவதனை கட்சியின் பல்வேறு முக்கியஸ்தர்கள் ஆதரித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.




# கனடாவில் வாழும் இந்தியப் புலம்பெயர்ந்தோரை தாறுமாறாக விமர்சிக்கும் இளம் பெண்ணின் பதிவு

கனடாவில் வாழும் இந்திய புலம்பெயர்ந்தோரை விமர்சித்து இளம்பெண் ஒருவர் சமூக ஊடகம் ஒன்றில் வெளியிட்டுள்ள செய்தி ஒன்று வைரலாகி வருகிறது.

மேகா என்னும் பெயரில் சமூக ஊடகமான எக்ஸில் இடுகை ஒன்றை வெளியிட்டுள்ள பெண்ணொருவர், தானும் தன் குடும்பத்தினரும் கனடாவில் வாழும் இந்திய புலம்பெயர்ந்தோரை வெறுக்கின்றனர் எனர் தெரிவித்துள்ளார்.

அதற்கான காரணங்களையும் அவர் வெளியிட்டுள்ளார்.

மேகா வெளியிட்டுள்ள செய்தியில் – நானும் என் குடும்பத்தினரும் இந்திய புலம்பெயர்ந்தோர் கனடாவை நிரப்புவதை வெறுக்கிறோம்.

அவர்கள் நமது நற்பெயரையே கெடுத்துவிட்டார்கள். கல்வி கற்ற இந்திய புலம்பெயர்ந்தோர் நல்ல குடும்பங்களிலிருந்தும், நகரங்களிலிருந்தும் வருகிறார்கள். அவர்கள் நாகரிகமானவர்களாகவும், ஆங்கிலத்திறமையும் ஆசாரங்களை கடைப்பிடிப்பவர்களாகவும் இருக்கிறார்கள்.

கனடாவில் வாழும் இந்தியர்களை விமர்சித்துள்ள இளம்பெண்: ஆதரவும் எதிர்ப்பும் ;

ஆனால், இந்த புதிய புலம்பெயர்ந்தோர், கடற்கரைகளை அசுத்தம் செய்வதும், பெண்களிடம் மோசமாக நடந்து கொள்வதுமாக இருக்கிறார்கள். அவர்கள், படிக்காத, தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்த பின்னணி கொண்டவர்கள். சமுதாயக் கடமையோ, கற்கும் திறனோ இல்லாதவர்கள். – என்று கூறியுள்ளார்.

வகுப்புப் பிரிவினைகள் உண்மை தான் என்னும் ரீதியில் கருத்து தெரிவித்துள்ள மேகா, 1980, 90களில் கனடாவுக்கு வந்த இந்திய புலம்பெயர்ந்தோரை மட்டும் புகழ்ந்து எழுதியுள்ளார்.

மேகாவின் கருத்துக்கு பல தரப்பிலிருந்தும், பல வகையான பதில் கருத்துக்களை தெரிவித்துவருகிறார்கள் இணையவாசிகள். அவரது இடுகை நான்கு லட்சத்தும் அதிகமான பார்வைகளைப் பெற்று வைரலாகி வருகிறது.

# நேர்த் யோர்க்கில் கத்திக் குத்தில் இரண்டு சிரேஷ்ட பிரஜைகள் சாவு

**ஒன்ராரியோ, ஜூலை 23**

கனடாவில் இடம்பெற்ற கத்திக்குத்து சம்பவத்தில் இரண்டு சிரேஷ்ட பிரஜைகள் கொல்லப்பட்டுள்ளனர்.

கனடாவின் டொரன்டோவின் நேர்த் யோர்க் பகுதியின் டொன் மில்ஸ் மற்றும் கிளிப்வுட்ஸ் வீதி பகுதியில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கத்திக்குத்து தாக்குதல் சம்பவத்திற்கு இலக்காகி பெண் ஒருவரும் ஆண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் சம்பவ இடத்திற்குத் தாம் விரைந்தனர் என டொரன்டோ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவ இடத்தில் ஆண் ஒருவரும் பெண்ணொருவரும் படுகாயம் அடைந்திருந்தனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.




காயமடைந்த இருவரையும் பொலிஸார் வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். எனினும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இருவரும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இருவரும் 80 வயதுக்கு மேற்பட்ட வயோதிபர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும், இந்த சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் இதுவரையில் கைது செய்யப்படவில்லை எனவும், எவர் மீதும் இதுவரையில் சந்தேகம் வெளியிடப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனக் கூறப்பட்டது.

என்ன காரணத்தினால் தாக்குதல் நடத்தப்பட்டது என்பது குறித்து தகவல்கள் இதுவரையில் வெளியிடப்படவில்லை.




# இந்தியக் குடும்பத்தினரை அலைக்கழித்தமைக்காக எயார் கனடாவை 4,200 டொலர் செலுத்த உத்தரவு



**ஒன்ராரியோ, ஜூலை 23**

குடும்பம் ஒன்றை சிரமத்திற்கு உள்ளாக்கியதாக குற்றம் சுமத்தி எயார் கனடா நிறுவனத்திற்கு நீதிமன்றம் தண்டனை விதித்துள்ளது.

நோவா ஸ்கோசியாவின் நீதிமன்றம் ஒன்று இவ்வாறு தீர்ப்பு வழங்கியுள்ளது.

கனடாவில் இருந்து இந்தியாவிற்கு பயணம் செய்த ஐந்து பேரைக் கொண்ட குடும்பம் ஒன்று எயார் கனடா நிறுவனத்திற்கு எதிராக வழக்குத் தொடர்ந்திருந்தது.

இந்தக் குடும்பத்தினருக்கு ஏற்பட்ட நெருக்கடி நிலைமைகளுக்காக சுமார் 4,200 டொலர்களை நட்ட ஈடாக செலுத்துமாறு நீதிமன்றம் எயார் கனடா நிறுவனத்திற்கு உத்தரவிட்டுள்ளது.

ஹாலிபெக்ஸை சேர்ந்த குடும்பம் ஒன்று ஒரு ஆண்டுக்கு முன்னதாக இந்தியாவிற்கு பயணித்துள்ளது.

அவர்கள் மீண்டும் கனடா திரும்பிய போது விமான சேவையை நிறுவனம் உரிய சேவையை வழங்க தவறியது எனவும் இந்தக் குடும்பத்தினர் பயணத்தின் போது அலைக்கழிக்கப்பட்டனர் எனவும் குற்றம் சுமத்தப்பட்டது.

விமான சேவை நிறுவனத்தின் பணியாளர் பற்றாக்குறையினால் விமானம் ரத்து செய்யப்பட்டதாகவும் – இதனால் அந்தக் குடும்பத்தினர் மாற்று வழியில் பயணிக்க வேண்டும் என பணிக்கப்பட்டனர் எனவும் அந்த குடும்பத்தினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

ஐந்து பேரை கொண்ட குடும்பத்தினர் பிரிக்கப்பட்டு இரு வேறு விமானங்களில் பயணிக்க செய்யப்பட்டனர் எனவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு மோசமான பயண அனுபவத்தை எயார் கனடா நிறுவனம் வழங்கியதாக குடும்பத்தினர் விசனம் தெரிவித்தனர்.

இதனால் தங்களது பயணப் பொதிகளை போக்குவரத்து செய்வதில் நெருக்கடிகளை எதிர் கொண்டனர் என்றும் குடும்பத்துடன் ஒன்றாகப் பயணம் செய்ய முடியாமல் போனதாகவும் இந்த குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்த செயற்பாட்டுக்காக அந்தக் குடும்பத்தினர் எயார் கனடா நிறுவனத்திடம் 20 ஆயிரம் டொலர்கள் நட்ட ஈடு கோரி வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

மனுவை பரிசீலனை செய்த நீதிமன்றம் நட்ட ஈடாக 4200 டொலர்களை செலுத்துமாறு உத்தரவிட்டுள்ளது.

# ஒன்ராரியோ மதுபானக் கடைகள் இன்று முதல் வழமை நிலைக்கு!

## வேலை நிறுத்தம் நேற்றுடன் முடிவு

**ஒன்ராரியோ, ஜூலை 23**

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த எல்.சீ.பீ.ஓ. ஊழியர்கள் நேற்று பணிக்குத் திரும்பினர்.

ஒன்ராரியோ மதுபானக் கட்டுப்பாட்டு வாரியமும் (எல்.சீ.பீ.ஓ.) அதன் 10,000 தொழிலாளர்களை பிரதிநிதித்துவப் படுத்தும் ஒன்டாரியோ பொது சேவை ஊழியர் சங்கமும் ஜூலை 20ஆம் திகதி ஒரு தற்காலிக உடன்பாட்டை எட்டியிருந்தன.

இந்த நிலையில் ஊழியர்கள் நேற்றைய தினம் பணிக்குத் திரும்பியுள்ளனர்.

மூடப்பட்டிருந்த மதுபான கடைகள் வணிகத்திற்காக இன்று செவ்வாய்க்கிழமை மீண்டும் திறக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இரு தரப்பினருக்கும் இடையே இந்த தற்காலிக உடன்பாட்டை எல்.சீ.பீ.ஓ. தொழிலாளர்கள் அங்கீகரித்துள்ளனர்.

# முந்நூறுக்கும் அதிக கனடிய வீரர்கள் பரிஸ் ஒலிம்பிக் போட்டிக் களத்தில்!




**ஒன்ராரியோ, ஜுலை 23**

பரிஸ் ஒலிம்பிக் போட்டியில் 300க்கும் மேற்பட்ட கனடிய விளையாட்டு வீரர்கள் போட்டியிடுகின்றனர்.

இந்த வாரம் ஆரம்பமாகும் ஒலிம்பிக் 2024, பதினைந்து நாள்கள் நடைபெறுகிறது.

ஜுலை 26ஆம் திகதி ஆரம்ப விழாவுடன் அதிகாரப்பூர்வமாக விளையாட்டுகள் தொடங்கும்.

ஆனால் சில போட்டிகள் ஜுலை 24ஆம் திகதியே ஆரம்பமாகின்றன.

கனடாவின் முதலாவது போட்டி ஜுலை 25ஆம் திகதி ஆரம்பிக்கும்.

இதில் கனடிய மகளிர் கால்பந்து அணி நியூசிலாந்தை எதிர்கொள்கிறது.

இம்முறை 32 விளையாட்டுகளில் 300க்கும் மேற்பட்ட கனடிய விளையாட்டு வீரர்கள் போட்டியிடுவார்கள்.

முன்னைய இரண்டு ஒலிம்பிக் போட்டிகளை விட இம்முறை ஒலிம்பிக் போட்டிக்கு கனடியர்கள் மத்தியில் ஆதரவு அதிகரித்துள்ளது.

கடந்த ஒலிம்பிக் போட்டியில் கனடா 24 பதக்கங்களை வென்றிருந்தது.




# கனடாவில் இந்துக் கோவில்கள் மீது தாக்குதல் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

கனடாவில், இந்துக் கனேடியர்களுக்கு எதிரான உடல் ரீதியான தாக்குதல்களுக்கு முன்னராகப் பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எம்.பி. சந்திரா ஆர்யா வலியுறுத்துகிறார்.

கனடாவின் எட்மன்டனில் சுவாமி நாராயண் என்ற இந்துக் கோவில் உள்ளது. அபகீர்த்தியை ஏற்படுத்தும் நோக்கில் கோயிலை இனந்தெரியாத நபர்கள் வர்ணம் பூசி சேதப்படுத்தியுள்ளனர்.

நேப்பான் தொகுதிக்கான எம்.பி. சந்திர ஆர்யாவின் கூற்றுப்படி, இந்து மற்றும் கனேடிய சமூகங்களுக்கு எதிரான வெறுப்பு சம்பவங்கள் நேரடியாக அதிகரித்து வருகின்றன.

சுவாமி நாராயண் கோவில் மீது மீண்டும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கிரேட்டர் டொராண்டோ பகுதி, பிரிட்டிஷ் கொலம்பியா மற்றும் கனடாவின் பிற பகுதிகளில் கோயில் சுவர்களில் வெறுப்புணர்வை எழுதுவது உள்ளிட்ட தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன என்று எக்ஸ் சமூக ஊடகங்களில் அவர் பதிவிட்டுள்ளார்.

கனடிய ஹவுஸ் ஆஃப் காமன்ஸ் உறுப்பினர் ராண்டி பாய்சோனால்ட் 'கோவிலில் வரைந்துள்ளனர். வெறுப்பு பரவுகிறது. கனடாவில் வெறுப்புக்கு இடமில்லை. வழிபாட்டுத் தலங்களிலும் தொழுகை இடங்களிலும் அதற்கு இடமில்லை. இது நமது நகரின் மதிப்புக்கு எதிரானது. தவறான செயல்' என்று கூறினார்.

முன்னதாக கனடாவில் மிசிசாகா மற்றும் பிராம்ப்டன் பகுதிகளில் உள்ள கோவில்கள் தாக்குதலுக்கு இலக்காகின. இதற்கு இந்திய சமூகத்தில் இருந்து கடும் எதிர்ப்பு கிளம்பியது.

கடந்த ஆண்டு, விண்ட்சரில் உள்ள ஓர் இந்துக் கோவில், இந்தியாவுக்கு எதிரான கோஷங்களால் சேதப்படுத்தப்பட்டது. இதற்கும் பரவலாக கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

கனேடிய மற்றும் இந்திய அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.



# ஜோ பைடனின் 50 ஆண்டுகால பொதுச் சேவைக்கு ஒன்ராரியோ முதல்வர் டக் போர்ட் நன்றி தெரிவிப்பு

**ஒன்ராரியோ, ஜூலை 23**

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் 50 ஆண்டுகால பொதுச் சேவைக்கு ஒன்ராரியோ முதல்வர் டக் போர்ட் நன்றி தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் இருந்து விலகுகிறார் என ஜூலை 21ஆம் திகதி ஜோ பைடன் அறிவித்தார்.

இந்த அறிவித்தலுக்கு பதிலளிக்கும் வகையில் உலகளாவிய ரீதியில் பலரும் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

தேர்தலில் யார் வெற்றி பெறுகிறார்கள் என்பது குறித்து தனக்கு கவலை இல்லை என டக் போர்ட் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த ஜனாதிபதி கனடாவையும், ஒன்ராரியோவையும் நியாயமாக நடத்துவதன் அவசியத்தை அவர் முன்வைத்தார்.

ஜோ பைடன் கனடியர்களுக்கு ஒரு சிறந்த நண்பனாக விளங்கியவர் என பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ வார விடுமுறையில் கருத்து தெரிவித்திருந்தார்.